Regd No. M. 4900. 16-பக்கங்கள்.

குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 21 } ஈரோடு 7-8-1948 சனிக்கிழமை { மலர் 48.

போர் ! போர் !! போர் !!!

ஆரம்பம் ஆகஸ்ட்டு 10.

★

முதல் சர்வாதிகாரி தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ.

பள்ளிகளில் மறியல் செய்வது; படை, ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்துதல்; மந்திரிகளை பகிஷ்காரம்செய்தல், இவைதான் இன்றையப்போர்த் திட்டங்கள்.

இச்செய்கைகள் நடைபெற வொட்டாமல் சர்க்காரால் ஆணவ வீச்சு வீசப்படுமென்றால் அவைகளை அர்த்தமற்றதாகக் கொண்டு மீறி மீறி அச்செயல்களைச் செய்தல்.

வெற்றி காணும் வரை இச்செயல்கள் தொடர்ந்து நடைபெற இதற்கென ஒரு செயற்குழு.

மறியல் செய்யும் களம் தொண்டைமண்டலம் உயர்நிலைப்பள்ளி அல்லது இந்து தியாலாஜிகல் உயர்நிலைப்பள்ளி.

2—8—48ம் நாள் காலை 10-30க்கு சென்னை மீரான் சாயபு 1 நெம்பர் கட்டிடத்தில் கூடிய மத்திய திராவிடர் கழக நிர்வாகக்கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவை இவை.

மேலும் ஹைதராபாத் பொறுப்பாட்சிக் கிளர்ச்சியை ஆதரித்தும், அடக்கு முறை முதலியவற்றைக் கண்டித்தும், "விடுதலை" ஜாமீனுக்கு நன்கொடை கொடுத்து உதவியவர்களுக்கு நன்றி செலுத்தியும், இந்தி எதிர்ப்புக்கு ஆதரவுகாட்டி எழுதியவர்களைப் பாராட்டியும், 1 முதல் 3 பாரம் வரை எந்தவகையிலும் இந்தி இடம் பெறக்கூடாதென்று தெளிவுறுத்தியும், பெத்தாம்பாளையம் தோழர் பி. பழனிச்சாமியவர்களை நிர்வாக அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்வதாகவும் பல தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேறியன.

ரோஜா முத்தையா

இதுதான் பார்ப்பனீயம்.

—()◉()—

“சார், சார், இதைப் படிச்சீங்களா?”

“என்னடா அது. விடுதலையா? பார்ப்பான்களெ ஏதாவது திட்டியிருப்பா”

“விடுதலை யில்லெ சார்; பார்ப்பான்களெ திட்ர வேலெயெத் தவிர வேறொண்ணும் வேலையில் லேன்னு நினைச்சீங்களா”

“சரி சமாச்சாரத்தைச் சொல்லடா”

“என்னத்தைச்சார் சொல்ல. இனப்பற்றுன்னா இப்படியல்ல சார் இருக்கனும்”

“எனடா உளர்ரே. சமாச்சாரத்தைச் சொல்லுடா”

“வா. ரா. இருக்காரில்லெ, அவரது பிறந்த தினத்தின் போது பண முடிப்பு ஒன்று தரப்போராங்களாம்”

“ஆமா அதுக்கென்ன”

“அதுக்கொண்ணுமில்லெ; ஒரே வாரத்திலே ரூ. 6822 வசூலாயிருக்கு”

“பண முடிப்புக் கொடுக்குறதுன்னா, பணம் வசூலானாதானே கொடுக்க முடியும்”

“அதுக்குச் சொல்ல வரலெ சார்; நம்ம நாமக்கல் கவிஞருக்குப் பணம் திரட்டினாங்களே, ஒரே வாரத்திலெ எவ்வளவு சேர்ந்தது? அதிலே 1000, 500 கொடுத்தவங்க எத்தனை பேரு?”

“டேய்! பார்த்தியா, இந்த மாதிரி வகுப்புவாதந்தானே கிளப்பரே”

“என்ன சார் சந்தேகம் கேட்டா, வகுப்புவாதம் என்கிறீங்க. அது போவுது, பாரதிதாசனுக்குப் பண முடிப்பு தந்தாங்களே, அந்தப் பணம் சேர்ப்பதற்கு எத்தனை நாளாச்சு”.

“ஆமா, அதுக்கும் இதுக்கும் என்னடா சம்பந்தம்”.

“சம்பந்தம் இருக்குது சார். வா. ரா. பிராம்மணர். நாமக்கல்லாரும் பாரதிதாசனும் சூத்திரர்கள். அதனாலேதான் வா. ரா. வுக்கு ஒரே வாரத்தில் ரூ. 6822 திரட்ட முடிந்தது. நம்ம ஆளுங்களுக்கு அதையே திரட்ட பல மாதங்களாயிற்று. ஒரே ஒரு நாள் வா. ரா. வுக்கு பணமுடிப்பு அளிக்கனும்னு ‘இந்து’ வில் அறிக்கை வந்தது. அடுத்த நாள் ரூ. 6822-சேர்ந்தது. நாமோ பல பத்திரிகைகளிலே அறிக்கை விட்டிருந்தோமே என்ன ஆச்சு”?

“டேய்!, டேய்! ஜனங்களுக்கு இப்பொழுதான் கலையிலே ஆர்வம் பிறந்திருக்குது. அதனாலேதான் தாராளமா கொடுக்கிறா”

“தெரியும் சார். இதெ சொல்லித்தான் அவங்களும் ஏமாத்தறாங்க. இன்னும் ஒன்னு பார்த்தீங்களா.. பார்ப்பான்களோ 500 ரூ. கொடுத்திருக்கிறாங்க. அதைப் பார்த்துவிட்டு, நம்ம ஆளுங்களும், அவர்களுக்கு இளைத்தவர்களா என்று நினைச்சிகிண்டு ரூபாய்கள் இல்லை இல்லை, கரன்ஸி நோட்டுகளை அள்ளி விட்டிருக்கிறாங்கோ. இவர்களெல்லாம் நம்ம கவிஞர்களுக்கு எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்களென்று உங்களுக்குத் தெரியுமா?”

“டேய்! என்டா எப்பப்பார்த்தாலும் பார்ப்பான்களெ திட்றீங்க. அதிலெ ஒருவன்கூட நல்லவனே இல்லையா. ‘வா. ரா. நல்ல சீர்திருத்த வாதியென்று நீங்களே சொல்றீங்க. அக்கிரகாரத்து அதிசய பிறவியென்று வேறெ சொல்றீங்க’. அவருக்குப் பணம் கொடுத்தா மட்டும் ‘பார்ப்பானுன்னு’ சொல்றீங்க.

“சார்! நீங்க மறுபடியும் என்னெ தவறா புரிஞ்சுகிட்டீங்க போலேயிருக்கு. வா. ராவுக்குப் பணம் கொடுப்பதைப்பற்றி நாங்கள் ஆக்ஷேபிக்கவில்லை. கஜானாவையே அவர் காலடியில் வைத்தால்கூட நாங்கள் கவலைப்படப் போவதில்லை. அவங்க சாதிக்கு எவ்வளவு இனப்பற்று இருக்கிறது என்று உங்களுக்குக் கூறத்தான் இதை உதாரணமாகக் காட்டினேன். ‘இதுதான் சார் பார்ப்பனீயம்’”

இதுபோன்ற உரையாடல், ஜுலை 21-ந் தேதி, வா. ரா. வின் 60-வது பிறந்த நாள் என்ற தலைப்பில் இந்துவில் வந்துள்ள செய்தியைப் பார்த்த பிறகு, என் சுயமரியாதைத் தோழர் குப்பண்ணாவின் மகனுக்கும், எனக்கும் நடந்தது.

‘இதுதான் சார் பார்ப்பனீயம்’ என்று சொல்லிவிட்டு அவன் போய்விட்டான். என் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

பித்தன்.

திருந்துவீரே!

★

பசுந்தளிரில் வெந்நீரைப் பாய்ச்சுகின்ற
பான்மைபோல் தமிழ்நாட்டுள் இந்தியென்னும்
கசடுள்ள மொழியதனைப் புகுத்திடற்குக்
கருதினார். அன்னவரின் கருத்தை மாய்த்து
விசையொடிய வில்லைஎம துடலிலென்று
விளக்கமுறக் காட்டினார் தமிழரன்னாள்.
பசையற்ற மொழிபுகுத்த முயன்ற தீயர்
பதுங்கினார் மூலையிலே முக்காடிட்டே!

முறையற்ற செயலதனை மீண்டும் செய்ய
முயலுவதைக் கண்டுவிட்ட தமிழரின்னாள்,
முறையற்ற செயலாற்ற முனைகின் றீரே!
முன்னாளின் பெரும்படையி லின்னாளேதும்
குறையவிலை! மும்மடங்காய்ப் பெருகி விட்டோம்!
கொள்ளியினால் தலைசொரிந்து கொள்ள வேண்டாம்!
குறையதனை எனணைத்துக் கொள்ளுகின்றீர்!
கூனகற்றித் தமிழ்மக்கள் நிமிர்ந்து விட்டோம்!

எனக்கூறி எச்சரிக்கை விடுகின்றார்கள்.
எழிலாரும் திராவிடத்தை ஆள வந்தார்
மனதினிலிவ் வெச்சரிக்கை யதையேற்காமல்
மனம்போன போக்கெல்லாம் போவாரானால்
இனியதமிழ் நாடுசுடு காடேயாகும்!
இரத்தவெள்ளம் நாடெங்கும் பெருக்கெடுக்கும்!
தினையளவு மிப்பழியை ஏற்க வேண்டாம்!
திருவிடத்தைக் காக்கவெனில் திருந்துவீரே!

சாமிபழனியப்பன்.

இந்தியாவில் ஆரிய சாம்ராஜ்ஜியமா?

திராவிடர் கோரிக்கை வகுப்புவாதமா?

இந்திய உபகண்டத்தில் ஆரிய சாம்ராஜ்யத்தை அமைத்துவிட வேண்டுமென்று கருதுகின்றனர், இந்திய தேசியவாதிகள் என்று கூறிக்கொண்டிருக்கும் ஆரியர்களும் அவர்களுக்கு அடிவருடும் சில இனத் துரோகிகளும். முடியுமா?

* *

விடுதலை வேட்கைகொண்ட திராவிட இனத்தின் வாழ்க்கை இலட்சியமாகிய "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற பிறப்புரிமையை அழித்து ஒழித்துவிட முயற்சிக்கிறார்களே முடியுமா? மண்ணுக்குரிய மக்களின் உரிமைப் போராட்டத்தை வகுப்புவாதம் என்று கூறி மறைத்துவிடலாமென்று சில சோற்றுத் துருத்திகளானசதைபதார்த்தங்கள் கருதுகின்றதுகளே முடியுமா?

* *

வருங்காலத்தில் வகுப்புவாதம் என்ற வார்த்தையே காலத்தின் அதிதீவிர மாற்றத்தினால் பொருளற்றதாகிவிடும். எதிர்காலத் திராவிடத்தில் வகுப்புப் போராட்டங்களும்—பாகு பாடுகளும் ஒழிந்து விடும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. திராவிடத்தில் ஜாதி பாகுபாடுகள் ஆரியம் நுழைந்த பின்னர்தான் தோன்றியதாகத் தெரிகிறது. அவர்கள் வெளியேறா விட்டாலும் இனி அது ஒழிந்துவிடும். இன்றைய மக்களில் பெரும்பான்மையோர் தங்கள் பெயர்களுக்கு பின் ஜாதிபெயர்களை குறிப்பிடுவதை நிறுத்தி விட்டதுடன்கூட சொல்வதற்குக்கூட வெட்கப்படுகின்றனர். பலருடைய உள்ளங்களில் உண்மையிலேயே வகுப்பு வேறுபாட்டுணர்ச்சிகள் மறைந்து விட்டன. நாட்டில் பல பல இடங்களில் கலப்பு மணங்களும் நடைபெறுகின்றன. ஆரியத்தால் விதைக்கப்பட்ட இந்த அநீதியால் திராவிட சமுதாயத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளும்—அநீதிகளும் எண்ணற்றன. மனிதனை மனிதன் மதிப்பதற்கு ஜாதியையும்—வகுப்பையும் அளவு கோலாகக்கொண்டிருந்த காலம் மாறிவிட்டது. இன்று எந்த மனிதனும் நான் பார்ப்பனன்—உயர்ந்த ஜாதிக்காரன் என்றுகூறி மக்களிடம் மதிப்பும்—கௌரவமும் பெறமுடியாது. விளக்கமாக கூறவேண்டுமானால் இன்று ஓரளவு வகுப்புவாத உணர்ச்சிகள் மறைந்து கொண்டிருக்கிறது. இந்த இருபது ஆண்டுகளாக சுயமரியாதை இயக்கம் நாட்டில் பகுத்தறிவைபரப்பி, மக்களது சிந்தனையின் பொன்னொளியைத் தூண்டிவிட்டதுதான் இதற்குக் காரணம்.

வகுப்பு வெறியுணர்ச்சியையும், குருட்டுப் பழக்கவழக்கங்களையும் ஒழியவேண்டும் என்று புத்தர் முதல் சமீபகாலத்தில் தோன்றிய வடலூரார் வரை கூறித்தான் வந்திருக்கின்றனர். அதற்காகப்பாடுபட்டும் வந்தனர். அவர்களை ஆரியம் ஒழித்துவிட்டது. அதுவுமன்றி அவர்கள் சென்ற பாதை சரியானதல்லவாகையாலும் நல்ல வெற்றி கிடைக்காமல் போய்விட்டது.

சுயமரியாதைக்காரர்களாகிய நாம் இதுவரை எவரும் போகத்துணியாத புரட்சிகரமானபாதையில் சென்றோம். ஜாதிமதங்கள் பரவுவதற்கும், நீண்டகாலமாக நிலவிவருவதற்கும் உள்ள சாதனங்களைக் கண்டுபிடித்து தூள் தூளாகத்தகர்த்தெறிந்தோம். ஆண்டவனைப்பற்றியும் அவன் அருள் பெற்றவர்களால் எழுதப்பட்ட நூல்களையும் துருவித்துருவி ஆராய்ந்தோம். அவைகள் அறிவிற்கும்—ஆராய்ச்சிக்கும் பொருத்தமற்றதாகவும், ஆபாசங்கள் நிறைந்ததாகவும், மனிதரிடையே மனமாற்சரியத்தையும் ஜாதி பேதங்களையும் உண்டாக்குவனவாகவும் இருந்ததை உணர்ந்து, இவைகள் ஒழிக்கப்பட்டால் ஒழிய மனித சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் வகுப்புவாதத்தை நீக்க முடியாதென்பதை உணர்ந்தோம். அதையே நமது கொள்கையாகவும்—திட்டமாகவும் கொண்டு பாடுபட்டு வருகிறோம். அதை எதிர்த்து கடவுளும், புராணங்களும் மனித வாழ்வுக்கு இன்றியமையாதவைகள்தான் என்று தாக்கரீதியாக வாதித்துப்பிறருக்கு எடுத்துக்காட்ட யோக்கியதையற்ற சில மரமண்டைகள் நம்மை நாஸ்திகர்கள் என்று கூறினார்கள்.

மக்களிடத்தில் மதத்தைப் புகுத்தி, மனித வர்க்கத்தின் மாண்பைக் கெடுக்கும் ஜாதிபேதங்களை உண்டாக்கி, தன்னை உயர்வகுப்பான் என்று கூறிக்கொண்டு, தான்உழைக்காமல் ஊரார் உழைப்பை சுரண்டி வாழ வழி வகுத்துக் கொண்டிருக்கும் பார்ப்பனீயத்தை ஒழித்தால் ஒழிய உண்மையாகவே வகுப்புவாதத்தை ஒழிக்க முடியாது என்று கூறி வருகிறோம். ஆனால் பார்ப்பனீயத்திற்குப்பாதுகாப்பளித்து, வளர்வதற்கு வழிசெய்து கொடுத்துக் கொண்டிருக்கும் இன்றைய அரசாங்கமும் வகுப்புவாதத்தை ஒழிக்கப் போகிறோம் என்று கூறுகின்றனர். அது எப்படி முடியுமென்பதே எனக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் விளக்கமாகத் தெரிகிறது. திராவிடர் கழகத்தாரைத்தான் வகுப்பு வாதிகள் என்று அரசாங்கத்தார் கூறுகின்றார்கள் என்பது.

திராவிடநாடு பிரிவினை கேட்பது வகுப்புவாதமென்றும், அந்த இயக்கத்தில் பங்கு கொண்டிருப்பவர்கள் அத்தனை பேரும் சுயமரியாதைக்காரர்களாகையால் அவர்களை ஒழித்துவிட வேண்டுமென்றும் மறைமுகமாக சிலர் மேடைகளில் பேசியும், பத்திரிகைகளில் எழுதியும் வருகின்றனர். அதுவுமன்றி திராவிடநாடு பிரிவினை கோரிக்கையை வகுப்புவாதம் என்று சொல்லி அடக்கிவிடலாம் என்றும் கருதுகின்றனர். சுயநலத்தை விட்டுவிட்டு, சொந்த அறிவைக் கொண்டு சிந்திக்கத் திறன் பெற்றிருக்கும் எந்த மனிதனும் சுயமரியாதைக்காரர்களையோ அல்லது திராவிடக் கழகத்தாரையோ வகுப்புவாதிகள் என்று கூறத் துணியமாட்டான்.

ஆரிய திராவிட பிரச்னை வகுப்புவாதமல்ல; இனப் போராட்டம். இரண்டும் வேறுபட்ட தனித்தனி இனங்கள் என்பதுவும், திராவிடர்கள் சிறந்த நாகரிகத்துடன் விளங்கியவர்கள் என்பதையும்சரித்திரம், புதைபொருள், ஆராய்ச்சி, கல்வெட்டுகள் முதலிய சான்றுகளுடன் விளக்கிக் கூறவும் முடியும்.

இப்பொழுது இந்தியாவிலுள்ள மக்கள் திராவிடர்கள், ஆரியர், மங்கோலியர், சித்தியர்கள், காக்கேஷியர் என்ற அய்ந்து இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று மனிதஉடற்கூற்றுச் சாத்திரநிபுணர்கள் வரையறுத்துக் கூறியிருப்பதாகவும் இதை எந்தச் சரித்திர ஆசிரியரும் மறுத்ததில்லை என்றும் தெரிகிறது. இதிலிருந்து திராவிடரும் ஆரியரும் தனித்தனி இனம் என்பது தெளிவாக விளங்குகிறது.

திராவிடர்களின் ஆட்சி முன்காலத்தில் தெற்கே குமரி முதல் இலங்கையும் உட்பட, வடக்கே இமயம் முட்டவும், மேற்கில் பெலுசிஸ்தானம் முதல் கிழக்கில் வங்காளம் வரைக்கும் பரவியிருந்ததாகவும் சரித்திரக்காரர்கள் கூறுவதுடன், சிந்துவில் உள்ள மோஹன்ஜோதாரோவிலும் அதற்கப்பால் 400 மைல் தூரத்திலுள்ள ஹரப்பா என்னுமிடத்திலிருந்தும் வெட்டி எடுக்கப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சியின் மூலம் கிடைத்திருக்கும் நாணயங்கள், பொருள்கள் மூலமாகவும், பெலுசிஸ்தானத்திலுள்ள இருபது இலட்சம் பேர்கள் திராவிட மொழியாகிய பிர

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

சித்தர் வாக்கு !

அநேக ஆண்டுகளாக ஆரண்யத்தில் அருந்தவத்திலாழ்ந்திருந்த சித்தர் அன்றுதான் கண்விழித்தார். அப்பா! எவ்வளவு காலம் தவத்திலிருந்தாரோ! உடம்பெல்லாம் ஒரே புழுதி!

முன்பு தவத்திலமரும்போது பூத்து, காய்த்து, பழுத்து தொங்கிய மரங்களெல்லாம் இப்போது வாடி வதங்கி காய்ந்துகிடத்தலைக் கண்டதும் இஃது கோடைகாலமென்பதை அறிந்து கொண்டார்.

ஆண்டவனை அகமலரில் ஏற்றி அருந்தவம் புரிந்தபோது அகன்றிருந்த பசி இன்று அவரை இலேசாக வாட்டத் தொடங்கியது.

பருவமாறுதலால் காய்ந்து பொட்டலாகிய கானகத்தில் பசியைப் போக்க ஆகாரம் எதுவும் கிடைக்காததினாலும், தான்யோகத்திலிருந்து அறிந்து கொண்ட உண்மைகளை நாட்டு மக்களுக்கு போதிக்கவும் காட்டைவிட்டு நாட்டை நோக்கி விரைந்தார்.

அன்று சொக்கநாதர் ஆலயத்தில் தேர்திருவிழா. திருவிழாவைக் காண தெருக்களிலெல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாக குழுமியிருந்தனர். 'திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள்' ஆரோகணித்திருந்த தேர் நிலையத்திலிருந்து புறப்படும்போது, மக்களிடையே "ஹரோஹரா" "ஹரோஹரா" என்ற குரல் ஆகாயத்தை முட்டியது.

காட்டைவிட்டு நாட்டையடைந்த சித்தரின் கண்கள் இக்காட்சியைக் கண்டது.

அப்பா! எத்தனை பெரியதேர்! இதை வடமிட்டிழுக்க எவ்வளவு மக்கள்! ஆனால் தேரின் மீது வைக்கப்பட்டிருக்கும் ஆண்டவன் எவ்வளவு சிறியது! என்ன அறிவீனம்? இவர்கள் மக்களா? மாக்களா? அங்கு இங்கு எனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை ஒரு சிறிய செம்பினுள் அடைக்க முடியுமா? களிம்புள்ள செம்பு கடவுளாகுமா? எக்காலத்தும், எவற்றினாலும் அழியாதவன் ஆண்டவன். ஆனால் இங்கு கடவுளாக மதிக்கப்படும் செம்பு அழிவற்ற பொருளா? நெருப்பினால் சுலபமாக உருக்கி அழித்துவிடலாமே! அழிவுள்ள செம்பை அழிவற்ற ஆண்டவனாகக் கருதுவது அறிவீனமல்லவா?

அய்யோ! இதென்ன அநியாயம்? ஏந்தவும் கரங்களற்று, பேசவும் நாவற்று, நடக்கவும் கால்களற்று, உண்ண உணவின்றி, உடுக்க ஒரு கந்தையுமின்றி கண்ணீர் மல்க கதறியழுகின்றனரே பிச்சைக்கார மக்கள்! கடவுள் திருமேனியில் அழகு செய்யும் ஒவ்வொரு வைரநகைகளும் ஓராயிரம் உயிர்களைக் காக்குமே! ஒரு புறத்தில் வறுமையினால், பசியினால் வாடிவதங்கும் மக்கள்; மற்றொரு புறத்தில்—அவர்களுக்கு எதிரிலேயே அவர்கள் நிலையைக்கண்டு ஒரு சிறிதும் மனமிரங்காது, வைரநகைகளை அணிந்து பவனிவரும் ஆண்டவன்!

கடவுளே! இப்படியும் இவர்களை அறியாமையில் ஆழ்ந்திருக்கச் செய்வது நியாயமா? இவர்கள் அறிவு பெற்று இறைவன் நிலையை உள்ளவாறு உணர்வது தான் எப்போ?

கூனராய், குருடராய், செவிடராய், நொண்டிகளாய், நோயாளிகளாய் வாழ வகையற்று பிச்சை கேட்கும் மக்களுக்கு காலணாக் கூட கொடுக்க மனமில்லாதவர்கள் ஆண்டவன் பெயரால் அறிவற்று அநேக ஆயிரம் ரூபாய்களைச் செலவு செய்வது நியாயமா? அநியாயம்! அறிவீனம்!

சித்தர் மனம் கொதித்தது. கொதித்த மனத்திலிருந்து வெளிவருகின்றது பகுத்தறிவு பாக்கள். அவர் அறியாமையைக்கண்டிக்கும் ஆர்வந்தானென்னே!

ஊரிலுள்ள மனிதர்க
ளொரு மனதாய்க் கூடியே
தேரிலே வடத்தையிட்டு
செம்பை வைத்திழுக்கிறீர்
ஆரினாலு மறியொணாத
வாதி சித்த நாதரை
பேதையானமனிதர்பண்ணும்
புரளி பாரும் பாருமே.

(சிவவாக்யர் பாடல்)

ஒரு சில வடநாட்டவருக்கும், அவரது வால் பிடிப்போருக்கும், மற்றும் சில பத்திரிகைக்காரர்களுக்கும் அஞ்சித் தமது முதல் உத்தரவை அமைச்சருக்கு மாற்ற முடிந்த தென்றால் மற்றொரு பகுதியார், உண்மைத் தமிழ் மக்களின் பெரும் பகுதியார் அதை எதிர்ப்பார்களானால் அவர்களுக்காக ஏன் அமைச்சர் மறுபடியும் தமது 2-வது உத்தரவை வாபஸ் வாங்கிக்கொள்ளக் கூடாது?

ம. பொ. சி.

ஆசிரியர் கடிதம்.

சாதிப் பட்டம்.

தஞ்சை, 27—7—48.

அய்யா,

பற்பலர் மேடைகளிலும், தாள்களிலும், நம் தமிழ்நாட்டு மக்கள் தங்கள் தங்கள் சாதியைக் குறிக்கும் பட்டங்களை நீக்கவேண்டுமென உரைக்கின்றனர்.

ஆனால் இந்நாட்டில் வெளிவரும் நாள்தாள்களிலும், திங்கள்தாள்களிலும், கிழமைத்தாள்களிலும் அச்சிடப்படும் கதைகளில் இப்பட்டங்கள் மிகைப்படப்பயன்படுத்தப்படுகின்றன. ஆங்கிலத்தாள்களில் வெளிவரும் கதைகளில் பட்டப்பெயர்கள் இல்லாததால்அக்கதைகளின் சுவைகள்குறைந்தனவா! பல்லாயிரக் கணக்காக வெளிவரும் கட்டுக் கதைகளிலும் சாதிப்பட்டங்கள் இல்லாமல் நம் மனதைக் கவரும் கதைகள் கணக்கற்றவை. சாதிப் பட்டப் பெயர்கள் போதாதென அக்கதைகளை விளக்கவரும் படங்களில் உள்ள மக்களுக்கும் சாதி வேற்றுமையைக் காட்டும் உடைகளை வரைந்து சாதியை வற்புறுத்துகிறார்கள்.

இதுவும் போதாதென அக்கதைகளில் நிகழும் பேச்சுகளும் சாதிவேற்றுமையைக் காட்டுகின்றன.

இவ்வாறு கட்டுக்கதைகளில் சாதி வேற்றுமையைக் கைவிடாதவர்களா வாழ்க்கையில் சாதி வேற்றுமையைக் கைவிடுவார்கள்!

திருச்சியில் உள்ள ஓர் கல்லூரியில் அய்யங்காருக்கு ஓர் உணவு விடுதியும், அய்யருக்கு ஓர் தனி விடுதியும் பற்பல ஆண்டுகளாக உள்ளன. மாணவர்களிடையே ஒற்றுமையை நிறுவுவதற்கு மாறாக வேற்றுமையைப் பதிக்கும் இவர்களா சாதி வேற்றுமையைவிட்டு விடுவார்கள்!

ஒவ்வொரு சிற்றூரிலும், பேரூரிலும் ஒரு வகுப்பினருக்கென தனியிடங்கள் உள்ளன. இவ்விடங்களில் மற்ற வகுப்பினரைக் குடியிருக்க விடார். மற்ற இடங்களில் இவ்வகுப்பினருக்கு வீடுகளிருப்பினும் அவ்வீடுகளில் தங்கள் வகுப்பினரல்லாதவர்களைக் குடியிருக்க விடார். ஆனால் தங்களுக்கு வீடு தங்கள் தனியிடத்தில் கிடைக்காவிட்டால் மற்ற வகுப்பினர் வாழும் இடங்களில் அடுத்தடுத்து குடியிருப்பார்.

நிலைமையிப்படியிருக்க, சாதி ஒழிந்ததெனவும், ஒற்றுமை நிகழ்ந்ததெனவும் பொய்ப் பறைசாற்றுபவர்களுக்கு என்ன பலன் கிடைக்குமோ!

இவ்வாறாக பொய்ப்பறை அடிக்கும் பதர்களைக் கதறவைக்கும் காலமும் கிட்டாதோ!

கோடைவேந்தன்.

கதை கற்பனை.

சிறுகதை

முதற்பருவம்.

யாருக்காக வாழ்ந்தான்?

போட்டி

எண் 9.

அவன் படித்த இலக்கியங்கள் எண்ணற்றவை; கற்றகருத்துக்கள் கணக்கற்றவை; இருப்பினும் வாழ்வில் நிம்மதியில்லை. ஆம்! அவன் கற்றது தான் காரணமோ என்னமோ? கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றிருந்தான். பிச்சைக்காரன் என்ற பட்டியலில் இல்லாவிட்டாலும் வாழ்க்கையை ஓர் அளவு நடத்திச் செல்லும் நிலையிலிருந்தான்.

மணிமன்னன் கல்லூரியில் பட்டம் பெற்று வெளிவந்து ஆண்டு ஒன்று கழிந்து விட்டது என்றாலும், உத்தியோகம் ஒன்றைத் தேடி வாழ்க்கைக்கு வழி தேடிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தை விட்டொழித்து, சிந்தனை அலையால் தாக்கப்பட்டு, செய்வதறியாமல் திக்பிரமை பிடித்தவன் போல் இருந்து வந்தான்.

தாய் அடிக்கடி வந்து, ஆம்! அவனுக்கிருந்தது தாய் ஒருத்தி தான் உறவினர் என்ற பட்டியலில், எண்டா தம்பி! ஊரிலே படித்தபையன்களெல்லாம் ஏதாவது ஒரு உத்தியோகத்தைத் தேடிக்கொண்டு, கலியாணம் செய்துகொண்டு எவ்வளவு களிப்பாக வாழ்கின்றார்கள். நீ மட்டிலும் என் இப்படிப் பல பத்திரிக்கைகளைக் கொண்டு வந்து வைத்துக்கொண்டு, பைத்தியக்காரன்போல் புரட்டிக்கொண்டிருக்கிறாய்? இப்படியே இருந்து கொண்டிருந்தால் சாப்பாட்டிற்காவது வழியொன்றும் வேண்டாமா? என்று கேட்காத நாட்களேயில்லை. ஆனால் அவன் காதில் அதுபட்டதோ படவில்லையோ தெரியவில்லை. வெளிப்படையாக அவன் கூறிய காரணம் ஒன்றே ஒன்று தான். "படித்தவன் செய்யவேண்டிய காரியங்கள் எவ்வளவோ உண்டு; உத்தியோகம் ஒன்று மட்டுமல்ல" என்பது தான். "அந்தக் காரியம் இந்தப் பைத்தியக்காரத்தனமான காரியந்தானா?" என்று சலிப்பாகக்கூறி வருந்தாத நாளில்லை அவன்தாய்.

இப்படிச் சென்ற நாட்கள் பல. அன்றுதான் அவன் வழியொன்று கண்டான். உத்தியோகம் தேடும் வழியல்ல. நாட்டிலே நலியும் மக்களின் வாழ்வுக்கு வழிதேடும் வழியை. கல்லூரியில் கற்ற ஏட்டு அறிவோடேயே இருந்திருந்தால் அவனுக்கு அந்த எண்ணம் எப்படித் தோன்றும். அவன் படித்த உலக சரித்திரத்தை மனக்கண்முன் ஒரு திருப்புத் திருப்பினான்.

"உலக சரித்திரத்திலே நல்லவர்களும் கெட்டவர்களும் மாறி மாறித் தோன்றியிருக்கின்றார்கள். நன்மையும் தீமையும் மாறி மாறித் தோன்றுகின்றன. நன்மை மட்டுமே ஏற்பட்டுக் கொண்டிருக்குமானால் தீமையை எப்படித் தெரிந்து கொள்வது. தீமை என்று சொல்லும்போது நன்மையும், நன்மை என்று சொல்லும்போது தீமையும் ஒன்றையொன்று தொக்கி நிற்கும் பதங்களாகும்.

ரோம் நாட்டிலே ஆபாசங்களும் அரண்மனை விருந்துகளும், அரசரின் விருதுகளும், போகபோக்கியங்களும் எங்களுக்குத்தான் சாசுவதம் என்று கூறி ஒரு சிறு கூட்டத்தினரான பிரபுக்கள், மதகுருக்களின் உதவியைக் கொண்டு மக்களை மதியிழக்கச் செய்து மடமையிலாழ்த்தி, "உழைக்கவே பிறந்தோம்" என்று கூறும்படியான எண்ணத்தை அவர்களுக்குப் புகுத்தி, சுகபோக வாழ்வு யாருக்குச் சொந்தம் என்று கேட்டால் பிரபுக்களுக்கு என்றுகூறும்படி செய்து, அது ஆண்டவன் படைப்பு, ஆணை, அதன்படி நடக்காதவர் மீளாநரகத்தில் ஆழ்த்தப்படுவர் என்று நம்பும்படி செய்து வந்த காலத்தில்தான், அவைகளுக்குச் சாவுமணி அடித்து, சமத்துவத்தை நிலைநாட்ட, அறியாமை இருளை நீக்கி அறிவொளியை உண்டாக்க, ஒரு சாக்கரட்டிஸ் தோன்றினார் இரண்டாயிரத்து அய்நூறு ஆண்டுகளுக்குமுன்! அங்கு அவ்வளவு அநீதங்கள் நடந்திராவிடில் ஒரு சாக்கரட்டிஸ் தோன்றியிருக்கமுடியாது.

அய்ரோப்பாவில், பதினாறாம் நூற்றாண்டில் மதம் என்ற அபினையுண்டு, நிலையிழந்து, ஆண்டவனின் அவதாரங்கள் நாங்கள்தான் என்று கூறிக்கொண்டு, செய்யும் குற்றங்களை மன்னிக்கும் அதிகாரம் தங்களிடம் தானிருக்கிறது என்று கூறி, அதற்கான கட்டணத்தைப் பெற்றுத், தான் தோன்றித்தனமாக, மதகுருக்கள் செய்துவந்த சதிசெயல்களுக்குச் சாவுமணி அடிக்கத்தோன்றிய ஜான்வீக்லிப்! நாகரீகம் என்பதே இன்னதென அறியா திருந்த சீனமக்களை, நாகரீக நாடுகளோடு போட்டிபோடும் அளவுக்கு சிறந்து விளங்கும்படி செய்த ஒரு சன்யாட்சன்! மக்களில் ஒரு இனத்தவரை ஒரு இனத்தார் வியாபாரப் பொருளாகவும், அடிமைச் சாதனமாகவும் உபயோகித்து வந்த அநாகரீகச் செய்கையை ஒழித்துக் கட்டிய ஒரு அபிரகாம் லிங்கன்! ஒரு வில்லியம் போர்ஸ்! மதக்குட்டையில் ஊறிய மட்டைகளாக வாழ்ந்த துருக்கியரை, பெண்களைப்போகத்துக்காய் ஒரு சாதனம், வெளியில் காட்டினால் வேறு சிலரும் ஆசைகொள்ள வழியுண்டாகும் என்று, முக்காடிட்டு மூலையில் அடைத்து வைத்து வந்த துருக்கியரை நிலையுணரச் செய்து, மதபோதனையை விளக்கி, மனித சாஸ்திரத்தை விளக்கிக்காட்டி, மாதர்களை சிறைபோன்ற வாழ்விலிருந்து சீரான வாழ்விற்கு கொண்டுவந்த ஒருகமால்பாச்சா! உழைக்கப்பிறந்தவர் ஒரு கூட்டம்; உண்ணப் பிறந்தவர் ஒரு கூட்டம். இரண்டு பண்பையும் ஒருங்கே பெற்ற கூட்டம் ஒன்றில்லை என்றிருந்த நாட்டில், உழைக்கப் பிறந்தவனுக்குத்தான் உண்ண உரிமையுண்டு என்ற பண்பை வெற்றியடையும்படி செய்த ஒரு லெனின்! உயர்வு தாழ்வு என்பதெல்லாம் உழைக்காதவரின் கோட்டை சுவர்! கடவுள் பெயரைச் சொல்லி காசு பறிக்கவே என் ஒரு கூட்டம் இருக்க வேண்டும்? அந்தக் காசு பறிக்கும் தரகனிடம் கடவுள் பேசும்போது காசு கொடுக்கும் மனிதனிடம் கடவுள் பேசாத மர்மம் என்ன? அந்தக் கடவுள் கல்லாக இருப்பதால் அல்லவோ! என்று மக்களிடம் தளராமல் கூறிவரும் ஒரு பெரியார் ராமசாமி! ஆம் இவர்களெல்லாம் தான் அவன் புரட்டிய உலக வரலாற்றில் வந்தவர்கள்.

இவர்களின் கருத்துக்களை ஒன்று திரட்டி ஒரு உருவமாக உண்டாக்கிக் கொண்டான் தன் உள்ளத்தில். அவைகளை அறியாத மக்களுக்கு அறிவுறுத்துவதுதான் தன் வேலை; மக்கள் அவைகளுக்கேற்ப நடந்து கொள்வதுதான் எதிர்பார்க்கும் பலன். இதுதான் அவன் சிந்தனையின்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

தோழர்களே!

இதற்கு முன் 8 கதைகளையும்

படித்தீர்களா?

இதையும் படியுங்கள்!

இன்னும் 4 கதைகள்

பிரசுரிக்கப்படும்.

அதையும் படியுங்கள்!

பிறகு தீர்ப்புக் கூறுங்கள்!

செய்தியும்—சிந்தனையும்.

● லஞ்சம், கள்ளமார்க்கெட் இவ்விரண்டையும் ஒழிக்க அய்க்கியமாகாண சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது. காங்கரஸ்காரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பிரதமர்பந்த் ஒரு கடுமையான எச்சரிக்கை விடுத்திருப்பதாகத் தெரிகிறது.

செய்தி.

லஞ்சம் கொடுத்துக் கள்ளமார்க்கெட் வியாபாரம் செய்வதென்பது அதிகாரிகள்-காங்கரஸ்காரர்கள் கூட்டு ஒப்பந்தம் என்று சொல்லிவிட்டபிறகு, எச்சரிக்கை செய்வதென்பது எப்படிப் பயனைத் தந்துவிடும்? கள்ளமார்க்கெட் ஒழிய வேண்டுமென்று உண்மையாகவே விரும்பினால், காங்கரசை ஒழித்து, காங்கரஸ்காரர்கள் என்கிற போர்வையை எந்த நபரும் உபயோகிக்காதபடியல்லவா முதலில் செய்யவேண்டும்?

● 2000 வருஷங்களுக்குமுன் விக்கிரமாதித்யன் அரசாட்சி செய்து நியாயம் வழங்கிய இந்த ஸ்தலத்தில், நியாயம் வழங்கும் பாக்கியம் கிடைத்திருப்பது குறித்து மத்திய பாரத் ஹைகோர்ட் நீதிபதிகள் பெருமிதம் கொள்ள வேண்டும்.

சிந்தியா மகாராஜா.

இந்தப் பெருமிதத்தினால் அந்த ஹைகோர்ட் நீதிபதிகள் கூடுவிட்டுக் கூடுபாய்கிற தந்திர முறைகளையெல்லாம் தீர்ப்புக் கூறும் வழக்கில் கையாளமாட்டார்கள் என்று நாம் நம்பலாமா?

● சென்னை சர்க்காரின் பஸ் போக்குவரத்து திட்டம், ஜமீந்தாரி ஒழிப்பு மசோதா முதலியவைகளை எடுத்துக்காட்டி, மாகாணங்கள் தனித்தனியாக, சுயேச்சையுடன் செய்யும் இம்மாதிரிச் செயல்களால் இந்தியாவின் அய்க்கியத் தன்மை பாதிக்கப்படுகிறதென்றும், மாகாணப் பித்தே இதற்குக் காரணமென்றும் கல்கத்தா வர்த்தகசங்கம் டெல்லியிலுள்ள நேருவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது.

செய்தி.

இங்குள்ள பார்ப்பானுக்குத் தேள் கொட்டினால் இமாலயத்திலுள்ள பார்ப்பானுக்கு நெறிகட்டும் என்பார்கள். அதைப் போலவா இது என்று யாரும் எண்ணலாம். ஆனால், இந்த மாதிரி, அந்தந்தமாகாண சர்க்காரே தொழிற் சாலைகளை ஏற்று நடத்துவதென்று வந்துவிட்டால், சிலமாகாணங்களை மார்க்கெட்டாகவே வைத்துக் கொள்ளையடிக்கவேண்டும் என்கிற திட்டம் என்ன ஆவது? இதைப் பிரதமமந்திரியாகிய நீர் அறியாதவரா? இதற்காகத்தானே நாங்கள் லெட்சம் லட்சமாய் காங்கரசுக்கு வாரி வாரி வழங்கினோம்! என்பதுதான் இக்கடிதத்தினுடைய உண்மை என்றால் இதையார் மறுத்துவிட முடியும்?

● ஸ்ரீ ரமண ரிசிகளைத் தரிசித்துச் செல்ல பம்பாய்ப் பிரதமர் ஸ்ரீ பி. ஜி. கெர் மைசூரிலிருந்து வந்திருந்தார். தரிசனம் செய்து கொண்டு இரவோடு இரவாய்ப் பின் பங்களூருக்குப் பயணமானார்.

செய்தி.

பிரதமர் ரெட்டியார் மட்டுமல்ல, எத்தனையோ பிரதமர்கள் என்னைத் தரிசிக்கக் காத்துக் கிடக்கிறார்கள். அப்படியிருக்கப் பகுத்தறிவியக்கம் என்னை என்ன செய்துவிடமுடியும்? என்று ஊர் மக்கள் சொத்தைத் தம்பிக்கு உயில் எழுதி வைக்கும், ஒய்யார புருஷரான ரமணரின் உள்ளம் எண்ணுமானால் அதில் தப்பு என்ன?

● ஸ்ரீ மும்மூர்த்தி விநாயகர் சன்னதி ஆடி வெள்ளி உத்ஸவத்தில், ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு மகாத்மா காந்தியின் சரித்திரத்தைக் கதாப்பிரசங்கம் செய்தார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் கேட்டு ஆனந்தித்தனர்.

செய்தி.

காந்தியாருடைய பரிதாப முடிவை விளக்கும் போது, ஷை தோழர் சுப்பய்யர் அவர்கள் காந்தியார் நிலையை அடைந்து காட்டுகிறாரா? அல்லது கோட்ஸே நிலையை அடைந்து காட்டுகிறாரா? அவற்றுள் எது தத்ரூபம்? என்பது பார்த்துச சொல்ல வேண்டிய சங்கதி. ஆனால் கொலை செய்த பார்ப்பனீயமே, அந்தக் கொலையை விளக்கிச் சொல்லிப் பணம் பறிக்கிறதென்றால், இந்த அக்கிரமத்தை அநுமதிக்கலாமா என்று ஜனங்கள் சிந்திக்க வேண்டாமா?

● சாந்தூர் சம்ஸ்தானத்தின் நிர்வாகத்தை நேற்று இந்திய சர்க்கார் ஏற்றது. பெல்லாரி ஜில்லா மாஜிஸ்திரேட் ஸ்ரீ அனந்த ராமன் பொறுப்பை ஏற்கச் செல்லும்போது காங்கரஸ்காரர்களான துக்கூர் சுப்பிரமணியமும், ஸ்ரீ அனந்தாச்சாரும் அவருடன் சென்றனர். இப்போது சாந்தூர் சமஸ்தானத்தை நிர்வாகம் செய்ய தாசில்தார் கே. ஐயாரமய்யர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

செய்தி.

அரசர் மாறி அய்யர் நிர்வாகம்! இதற்குத்தானா இந்திய சர்க்கார் நிர்வாகம் என்பது? அரசவர்க்கத்தை ஆக்கியதும், அந்த வர்க்கத்தை ஆட்டி வைப்பதும் அய்யர் வர்க்கம்தான் என்கிற ஞானோதயம், எப்போதுதான் நம் இந்திய சர்க்காருக்கு வருமோ என்று நீங்கள் கவலைப்படுகிறீர்களா? இந்திய சர்க்காரே அய்யர் வர்க்கமாயிருக்கும்போது இந்தக் கவலையில் என்ன அர்த்தம் இருக்கிறது?

● ராஜமந்திர சிந்தாமணி, தர்ம பிரகாச, தர்மப் பிரவர்த்தா, லோகஸவனிரதா, ராஜசேவாஸக்த, தர்மபுராயணி, லோகாஸேவானிரதா, பண்டித ரத்னம், சங்கீத வித்வ விஷாரத, ஜோதிஷரத்னம் போன்ற பட்டங்களை மைசூர் மகாராஜா விசேஷ தர்பார் நடத்தி பலருக்கு வழங்கினார்.

செய்தி.

வெள்ளைக்காரன் கொடுத்த பட்டங்களுக்கு அர்த்தம் புரிந்தாலும் புரியலாம், இந்த குட்டிப் பார்ப்பனீய ஆட்சியில் கொடுக்கும் பட்டங்கள் வாயிலேயே நுழையாது போலிருக்கே என்று பட்டம்பெற்ற எந்தத் தமிழனாவது நினைத்தால் அதிலென்ன ஆச்சரியம்?

● இந்திய சர்க்காரின் கொள்கையை முன்னிட்டு, கோவையிலும் அதைச் சுற்றிலுமுள்ள மில்லுகளில் சர்க்கார் போலீஸ் பந்தோபஸ்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

செய்தி.

10 லட்சம் ரூபாயில் போட்டிருக்கும் எங்கள் பந்தோபஸ்தை, இந்தப் போலீஸ் பந்தோபஸ்த் அசைத்துவிட முடியுமா என்ன? என்று நேருவுக்கு 10 லட்ச ரூபாய் கொடுத்த கோவை மில் முதலாளிகள் பேசிக் கொள்ளலாமல்லவா?

● தானியங்களைப் பாதுகாக்கும் முறை இந்தியாவில் மோசமாக இருப்பதால், அயல் நாடுகளிலிருந்து நாம் இறக்குமதி செய்யும் அளவுக்கு தானியங்கள் இந்தியாவில் வருஷா வருஷம் கெட்டுவிடுகிறது.

உணவு மந்திரி தௌலத்ராம்.

இந்நாட்டு மக்கள் பலர் அரைப் பட்டினி கிடப்பதற்கு யாருடைய முட்டாள்தனம் காரணம் என்பது இப்போது புரிகிறதல்லவா?

● சென்னை நகரத்தில் சிலர் இந்தி எதிர்ப்பு இயக்கம் சம்பந்தமாகச் சில செகண்டரிப் பள்ளிக்கூடங்கள் முன்பு மறியல் செய்வது சம்பந்தமான யோசனை ஒரு அதிகாரியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. அதை சர்க்கார் உறுதியுடன் சமாளித்து உறுதியான நடவடிக்கை எடுக்குமென்று அந்த அதிகாரி பதிலளித்தார்.

தினமணி.

பிள்ளையைப்பெற்ற பார்ப்பனமுண்டச்சி நிலைபோல இந்த அதிகாரியின் பெயரும் வெளியிடப்படாததின் மர்

ஓ. எம். சுப்பிரமணியன்

தமிழனே இது கேளாய்!

★

தமிழா! அன்று அவினாசியார், தமிழகத்திலே மட்டும் இந்தி இஷ்டபாடமாக வைத்திருப்பதாகக் கூறக் கேட்டாய். சின்னாட்களுக்குப் பின்பு ''இந்தியைக் கட்டாய பாடமாக்கிவிட்டேன்'' என்பதனையும் கூறக் கேட்டாய். இந்தி எதிர்ப்பாளர்மாநாட்டைப் பார்த்த பிறகு ''இந்தியை எங்கு கட்டாயமாக்கினேன். இரண்டாவது மொழித் திட்டத்தில் அதுவும் ஒன்றுதானே. அது எப்படிக் கட்டாயமாகும்'' என்று அதே அமைச்சர் அசெம்பிளியில் கூறவும் கேட்டாய். எதை எதையோ அவினாசியாரிடமிருந்து கேட்டாய். ''இந்தி கட்டாயமில்லை'' என்று தேசிய ஏடுகள் கொட்டை எழுத்துக்களில் எழுதியிருந்ததையும் பார்த்திருப்பாய். இந்தி பிரசாரச் சபைத் தலைவர் வேதரத்தினம் என்பாரின் ''10-லட்சம் தொண்டர்களைக் கொண்டேனும் பார்முழுதும் இந்திதனைப் பரப்பிடுவோ'' மென்கிற வீர உரை (?) வெளியிடப்பட்டுள்ளதை செய்தித் தாள்களிலே படித்திருப்பாய். இருபதினாயிரம் மக்கள் கூடி இஷ்டபாடமாகக் கூட இந்தியை ஏற்கமாட்டோம், எவ்வடிவத்தில் வரினும் எதிர்த்தே தீருவோம், என்று அரசியலாருக்கு அறிக்கை விடுத்ததைப்பற்றி தேசிய தினசரித் தாள்கள் ஒரு வரி கூட எழுதவில்லையே, அஃது ஏன், என்று நினைத்து மிருப்பாய். ஆனால் அவினாசியார் இந்தியைப்பற்றி அசெம்பிளியில் கூறியதும், அதனைத் தாங்கிப் பிடித்து தேசிய ஏடுகள் தகிடுதத்தம் செய்ததும், முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறதே என்று மட்டும் எண்ணியிருக்கமாட்டாய். ஆகையால் தான் கூறுகிறேன், இதைக் கவனமாகக் கேளென்று.

இந்தியைக் கட்டாய பாடமாக்கவில்லை என்று அவினாசியார் எப்போது கூறினார்? இந்தி எதிர்ப்பாளர் மாநாட்டிற்குப் பிறகு மட்டும் இந்தி கட்டாய பாடமாக்கப்படவில்லை என்று கூறுவானேன்? அதுவும் அசெம்பிளியில் கேள்வி எழுந்தபிறகு. உண்மையிலேயே இந்தி தமிழகத்திலே கட்டாய பாடமாக்கப்படவில்லையென்று இந்தி எதிர்ப்பாளர் மாநாட்டிற்கு முன்பு அல்லவா கூறியிருக்க வேண்டும்? 10-ஆண்டுகளுக்கு முன்பே இந்தி எதிர்ப்புக்காக தமிழர்கள் அரசியலாருடன் அறப்போர் தொடுத்ததை மறந்து விட்டாரா? இந்தி எதிர்ப்பாளர் மாநாட்டிற்கு முன்னமேயே, கட்டாய இந்தி தமிழகத்திலே கூடாது என்பதைச் சில தேசிய (வார) ஏடுகள் கண்டித்து எழுதியதை அமைச்சர் அறியாரா? அதுபோது அல்லவா இந்தி கட்டாய மில்லை என்று கூறியிருக்க வேண்டும்? அங்ஙனம் செய்யாது இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்குப் பிறகு, நாட்டிலே பல கழகங்கள் கண்டனக் கூட்டங்கள் போட்ட பிறகு, கட்டாய இந்தி தமிழகத்திலே இல்லை என்று அசெம்பிளியில் கூறினால், அதன் பொருளென்ன? ஒன்று நாட்டிலே நடக்கும் நானாவித செய்கைகள் மீதும் அமைச்சருக்கு நாட்டம் இல்லாதிருக்க வேண்டும், அல்லது நம்மிடத்தில் தான் மக்கள் பூஜா உணர்ச்சி கொண்டுள்ளார்களே, எதுவேண்டுமானாலும் நாட்டிலே செய்யலாம் என்ற எண்ணமிருந்திருக்க வேண்டும்; இரண்டுமில்லையென்றால், இந்தியைப் பற்றிய பாடத்திட்டத்தின் அறிக்கையை வெளியிடும்போதே அல்லவா விளக்கமாகக் கூறியிருக்க வேண்டும், ''இந்தி கட்டாய பாடமாக்கப்படவில்லை'' யென்று. இந்தி பாட திட்டத்தை வெளியிட்ட பின்னர், அமைச்சர் எவ்வளவோ இடங்களுக்கு சுற்றுப் பிரயாணம் செய்துள்ளார். அவ்விடங்களிலெல்லாமல்லவா கூறியிருக்க வேண்டும், ''இந்தி கட்டாய பாடமாக்கப்படவில்லை யென்று''. கூறியிருந்தால் இந்தி எதிர்ப்பாளர் மாநாடு நடைபெற்றிருக்குமா? அல்லது மக்கள் தான் ஆதரவு தந்திருப்பார்களா? தேசிய ஏடுகள்தான் கண்டித்திருக்குமா? நமது அறிக்கையைக் கண்டே மக்கள் தெரிந்துகொள்வார்கள். ஆகையால் அதனைப்பற்றி விளக்கம் கூறத் தேவையில்லையென்று எண்ணுவதற்குமிடமில்லையே! ஏனெனில் இந்நாட்டு மக்கள் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பேர் படிக்கத் தெரியாத மக்கள் என்று அவரே கூறியிருக்கிறாரே. படிக்கவே தெரியாத மக்கள் இந்தியைப் பற்றிய பாடத்திட்டத்தின் குறிப்பை எப்படி அறிந்துகொள்வார்கள், ஆகையால் அதைக் குறித்து விளக்கம் கூறுவோம் என்றல்லவா மந்திரி எண்ணியிருக்கவேண்டும். ஆகையால் அமைச்சர் நாட்டிலே எழுந்த எதிர்ப்பைக் கண்ட பிறகு, ''இந்தி கட்டாய பாடமாக்கப்படவில்லை'' என்று கூறுகிறார் என்பது விளங்கவில்லையா? இந்தி எதிர்ப்பாளர் மாநாட்டிற்கு முன் ''இந்தியைக் கட்டாய பாடமாக்கவில்லை'' என்ற கூற்றை எங்கேயாவது சொல்லியிருக்கிறாரா என்பதைத் 'திருக்குறள்' மீது ஆணையிட்டுக் கூறுவாரா? ''எப்பக்கம் வந்து புகுந்துவிடும், இந்தி எத்தனை பட்டாளம் கூட்டிவரும், அற்பமென்போம் அந்த இந்திதனை அதன் ஆதிக்கம் தன்னை ஒழித்திடுவோம்'' என்ற இளங்காளைகளின் எதிரொலியைக் கேட்டல்லவா ''இந்தி கட்டாய பாடமாக்கப்படவில்லை'' என்று அமைச்சர் கூறுகிறார்.

இந்தி எதிர்ப்பு மாநாடு வரை ஒன்றும் பேசாதிருந்த தேசிய தினசரி ஏடுகளாவது இதை விளக்கியிருக்க வேண்டாமா? நமது அமைச்சர் அய்தராபாத்திலும், காஷ்மீரிலும் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. நாமாவது அந்தப் பணியை ஏற்று நடத்துவோமென்று எண்ணியிருக்க வேண்டாமா? தேசிய தினசரி ஏடுகளின் நிருபர்கள் மக்கள் நடமாட்டமில்லாத இடத்திலா குடியிருக்கிறார்கள், இந்தி எதிர்ப்பு நாட்டிலே வலுவடைகிறது என்று கூறாதிருக்க. வேதரத்தினத்தின் வெளியீட்டையும், அமைச்சரின் அசெம்பிளி பேச்சையும், கொட்டை எழுத்துக்களிலே ஏந்தி வந்த ஏடுகள், இந்தி நுழைவால் ஏற்பட்ட கொந்தளிப்பு நாட்டிலே காட்டுத் தீப்போல் பரவுகிறது என்று அறிந்திருந்தும், வாயடைத்திருந்ததின் காரணமென்ன? ஆக, இவைகளிலிருந்து அறியக்கிடப்பது என்னவென்றால், கட்டாய இந்தியை வேண்டுமென்று நுழைக்கவே அரசியலார் எண்ணம் கொண்டிருந்தனர், எதிர்ப்பைக் கண்டவுடன் பேச்சை மாற்றிக் கொண்டனர்—என்றுதானே புலனாகிறது.

இனி, இந்தி கட்டாயப் பாடமாக்கப்படவில்லை என்பது, நடைமுறையில் (அவினாசியார் அறிவித்துள்ளபடி) எந்நிலைமையில் இருக்கிறது என்று பார்த்தால், அமைச்சரின் பேச்சு விசித்திரமானது என்பது நன்கு விளங்கும்.

இரண்டு நண்பர்கள் காபி ஓட்டலுக்குச் சென்றார்கள். ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, அப்பனே நீ எது வேண்டுமானாலும் சாப்பிடலாம். அல்வா, குலோப்ஜான், பாதாம்கீர், பூரி, வடை முதலிய எதுவேண்டுமானாலும் பிரியம்போல் சாப்பிடலாம். ஆனால் இவ்வோட்டலில் இருப்பது ஊத்தப்பம்தான் என்றானாம். இதுபோன்றல்லவா இருக்கிறது அமைச்சரின் பேச்சு? இரண்டாவது பாடத்திட்டத்தில் எதுவேண்டுமானாலும் படிக்கலாம், ஆனால் இந்தி மட்டுந்தான் இப்பொழுது படிக்கத்தக்க வசதி செய்யப்பட்டுள்ளது என்றால் இதன் பொருள்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

மம் என்ன? கவனத்துக்குக் கொண்டு வரக்கூடிய நிலையில் அந்த அதிகாரி என்றால், அந்த அதிகாரி எந்த லோகத்தில் மிதந்து கொண்டிருந்தார்? ''உறுதியுடன் சமாளித்து உறுதியான நடவடிக்கையை'' இந்தப் பெயர் மறைக்கும் முக்காடு நடத்திப் பார்க்கட்டுமே என்று இந்தி எதிர்ப்பாளர்கள் கூறலாமல்லவா?

நன்றியும், வேண்டுகோளும்!

★

சென்னை, ஆக 4.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் சம்பந்தமாகத் தங்களது சம்மதத்தையும், தியாகத் தீயில் குதிப்பதற்கான தங்களது ஆயத்தத்தையும் தெரிவித்து நாட்டின் பல பகுதிகளினின்றும் தோழர்களிடமிருந்து நாள்தோறும் வந்து குவியும் கடிதங்கள் கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இதுசம்பந்தமாக கையெழுத்து வாங்கி அனுப்பிவைக்கும் தோழர்களுக்கும் தனிப்பட்ட முறையில் கையெழுத்திட்டு கடிதமெழுதிவரும் தோழர்களுக்கும் தனித்தனியே பதில் எழுதமுடியாமைக்கு வருந்துவதோடு இதன்மூலம் எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தி எதிர்ப்பு நடவடிக்கைக்காக வெளியூர்களில் கையொப்பம் தந்துள்ள தோழர்கள்,

தயாராக இருக்க வேண்டும்; இங்கு யாரும் அழைப்பில்லாமல் வரக்கூடாது.

அருள்கூர்ந்து இதைக் கவனிக்கவும்.

ஈ. வே. ராமசாமி.

குடி அரசு

7—8—48 சனிக்கிழமை.

களம் நோக்கி வருக! வருக!!

★

திராவிடர் கழக மத்திய கமிட்டி இந்த மாதம் 2-தேதி தலைவர் வேதாசலம் அவர்கள் தலைமையில் சென்னையில் கூடி, இந்தி எதிர்ப்பின் நடவடிக்கைகளை எப்படி. எப்படிச் செய்வது என்று செய்திருக்கும் முடிவை நாம் மற்றொரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

அவைகளுள் பொதுக்கூட்டம் நடத்திப் பிரசாரம் செய்தல், வெவ்வேறு முனைகளிலிருந்து இந்தி எதிர்ப்புப்படை புறப்பட்டு, கால் நடையாகவே ஒவ்வொரு ஊரிலும் தங்கிப் பிரச்சாரம் செய்து கொண்டே குறிப்பிட்ட களத்திற்கு வந்து சேருதல், மந்திரிகளைக் காணும் போது பொதுமக்கள் தங்களுடைய வெறுப்பைக் காட்டிக் கொள்வதற்காகக் கருப்புக்கொடி பிடித்தல் ஆகிய மூன்றோடு, குறிப்பிடுகின்ற பள்ளிக் கூடத்தின் முன்பு, இந்தியைப் படியாதீர்கள் என்று மாணவர்களை வேண்டிக் கொண்டு, மறியல் ஆரம்பிப்பது, அதற்கு முதல் சர்வாதிகாரி தோழர் சி. என். அண்ணாதுரையவர்கள் எம். ஏ., ஆரம்பிக்கும் நாள் ஆகஸ்டு 10, என்கிற முடிவைக் கேட்டு, எப்போது ஆரம்பம்? எப்போது ஆரம்பம்? என்று ஏக்கத்துடன் காத்துக்கொண்டிருந்த இளங்காளைகள் எல்லாம் தொடை தட்டியிருப்பார்கள். எங்களுடைய உணர்ச்சியையெல்லாம் இப்படியே எத்தனை நாளைக்கு அடக்கி வைத்துக்கொண்டிருப்பீர்கள்? பார்ப்பன அடிமைகளின் பயத்தினால் நம்முடைய உரிமைகள் எல்லாம் நாளுக்குநாள் பறிக்கப்பட்டு வருகிறதே! இந்த நிலைமையிலும் கூடவா அடக்குமுறைக்கெல்லாம் நாம் அடங்கவேண்டும் என்கிற இதோபதேசம்? என்று வாய் விட்டுச் சொல்லியும், சொல்லாமலும்கொதிப்படைந்துகுமுறிய வீரர்கள் எல்லாம் இந்த முடிவைக் கேட்டுப் பெரும் எக்களிப்புக் கொண்டிருப்பார்கள். திராவிட உணர்ச்சியுடைய ஒவ்வொரு ஆணும், பெண்ணுமே இந்த முடிவையறிந்தவுடன், ஒரு புழுக்கமான அறையிலிருந்து தூயகாற்று வீசும்படியான வெளியிடத்திற்கு வந்ததைப் போன்ற உணர்ச்சி பெற்று, இனிஇறந்தொழிந்தாலும் கவலையில்லை, எப்படியும் லட்சியத்தை நிறைவேற்றுவோம் என்கிற உணர்வோங்கி நிற்பார்கள் என்பதுறுதி.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு, முதல் முதல் நான்பலியாகத் தயார் என்று முன்வந்து, முதல் சர்வாதிகாரி ஸ்தானத்தைப் பெற்றிருக்கும் தோழர் அண்ணாத்துரையவர்களை நாம் பெருமகிழ்ச்சியுடன் பாராட்டுகிறோம்.

இப்போதைய இந்தி எதிர்ப்பின் அடிப்படை எது என்பதைத் தலைவர் பெரியாரவர்கள் பலமுறை விளக்கிவந்திருந்தாலும், இந்த மாதம் நாலாம் நாள் விடுதலையில் வெளிவந்த அறிக்கையிலும் திட்ட வட்டமாக விளக்கியிருக்கிறார்கள்.

“இந்தி எதிர்ப்பு வெறும் மொழிப் பிரச்னை என்பது மாத்திரமல்லாமல் அன்னிய இனப்போராட்டம், அன்னிய கலாச்சாரப் போராட்டம், அன்னிய ஆட்சிப் போராட்டம் முதலிய பல தத்துவங்களைக்கொண்டதாகும்.” என்கிற இந்த விளக்கத்தைக்காங்கரஸ் திராவிடத் தோழர்களும், பார்ப்பனீய ஆதிக்க மந்திரிசபையும் நல்லமுறையில் விளங்கிக்கொள்ள வேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறோம். இந்தி நுழைப்பினுடைய அடிப்படை இந்த நோக்கத்தோடுதான் அமைந்தது என்பதை, 10 வருஷங்களுக்கு முன்பே இன்றையக் கவர்னர் ஜெனரல் ராஜகோபாலாச்சாரியாரவர்கள் இந்தியும் சமஸ்கிருதமும் ஒன்றுதான் என்று கூறியிருக்கிறார். அதாவது சமஸ்கிருதத்திற்குப் பதிலாகவே இந்தியைக் கொண்டு வந்தேன் என்று கூறியிருக்கிறார். இப்போது இந்த முறையும் எதிர்ப்பு ஏற்பட்ட பிறகு அந்த எதிர்ப்புக்குச் சவாலாக மயிலையும் மாம்பலமும் கூடிக்கொண்டு, “சமஸ்கிருதத்தை அகில இந்திய இயக்கமாகக் கொண்டுவரவேண்டும்” என்று கொக்கரித்திருக்கிறது. மதுரையிலே ஒரு பார்ப்பனர், “இந்தி எதிர்ப்பை நாம் லட்சியப்படுத்த வேண்டாம், 2வது மொழியில் இந்தியை மட்டுமே சர்க்கார் பாடத்திட்டமாக வைக்கவேண்டும், அந்த ஒன்றையே இந்த நாட்டவர்கள் கட்டாயமாகப் படிக்க வேண்டும், அதற்கு நாம் இப்போதே உடனடியாக ஒரு இயக்கம் தொடங்க வேண்டும்” என்று அபூர்வமான யோசனையை வெளியிட்டிருக்கிறார். ஆகவே இந்தி இஷ்டபாடமாகவோ, கட்டாயபாடமாகவோ எந்த ரூபத்தில் இந்த நாட்டில் புகுத்தப்பட்டாலும், அது சமஸ்

கிருத மொழியைப் புகுத்துவதாகவும், சமஸ்கிருத கலாச்சாரத்தைப் புகுத்தி வற்புறுத்துவதாகவும், சமஸ்கிருத இனத்தின் நிரந்தர ஆட்சிக்கு அடிகோலுவதாகவுமே இருக்க முடியும். இந்த உண்மையை உணர்ந்து கொள்ளாமல், எதிர்ப்பில் ஈடுபடுவோரின் இலட்சியம், மொழிப் பிரச்னையை அடிப்படையாகக்கொண்டது என்று எண்ணும் அவசரவாதிகளையும், ஆழமறியாதோர்களையும் இந்த விளக்கம் கண்களைத் திறக்கவைக்கும் என்றும் நாம் நம்புகிறோம்.

இப்போராட்டம், இந்தப்போரத்திலேயே வெற்றி தோல்வி கண்டு விடவேண்டுமென்கிற முடிவோடு அல்லாமல், எத்தனை போராட்டங்களை நடத்தியாயினும், எந்த வகையான அன்னிய ஆதிக்கத்திலிருந்தும் திராவிடம் விடுபட்டே தீரவேண்டும் என்னும் தெளிந்த முடிவோடு தொடங்கப்பட்டதாகும் என்கிற தலைவரின் போர்விளக்கத்தையறிந்த, பார்ப்பனீயமும்—பனியாக் கூட்டமும் பதைபதைக்கும் என்பதும், பதைபதைப்பால் அறிவொளியும் கண்ணொளியும் மழுங்கி, அகங்கார உச்சியில் ஏறி, ஆணவத் திமிர் குலுக்கப் பெரும் ஆட்டம் காண்பிக்கவே செய்வார்கள் என்பதும் உறுதி.

இந்தஆட்டத்தினுடையமுடிவாக, பலர் அடிபட்டு, கால் கை முறிந்து கீழே வீழ்த்தப்பட்டுப், பலர் சாக வேண்டிய நிலையும் வந்து சேரவே நேரும். இப்படிப் பலர் பலியாவார்களேயானால் அதனுடைய பின் விளைவு எப்படியிருக்கும்? கதைகளிலும், சித்திரங்களிலும் குறிப்பிடக்கூட முடியாதபடி இந்த நாட்டு ஆரியம் ஒழிவதற்கு, ஓடுவதற்கு ஆகாய வழியாகப் போடப்பட்ட பாதை என்று படைத்தலைவர் விளக்கியிருப்பதை குறிப்பாகப் பார்ப்பனீயம் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறவும் நாம் ஆசைப்படுகிறோம்.

முந்திய இந்தி எதிர்ப்புப் போருக்கும் இப்போதைய இந்தி எதிர்ப்புப் போருக்கும் பெரும் வித்தியாசம் இருக்கிறது. இப்போது இந்தியை எதிர்க்கும் நாம் பெரும் அளவில் ஆள்பலத்தையும் பொருள் பலத்தையும் பெற்றிருந்தாலும், இப்போராட்டம் நடைபெறவேண்டியதற்கு அவசியமும், நியாயமான காரணமும் இருந்தாலும், நம்முடைய லட்சியம் நிறைவேறவேண்டுமானால் போராட்டக் காலத்தில், போராடுங்களத்தில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பொறுத்துத் தான், நம்முடைய இந்தப் போராட்டத்தின் வெற்றியும் தோல்வியும் அமையும் என்பதை

ரோஜா முத்தையா

—: என் நன்றி! :—

★

அறப்போர், ஆகஸ்ட்டு 10-ந்தேதி ஆரம்பமாகிறது—ஆற்றல் மிக்க திராவிடத் தோழர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த 'அழைப்பு' கிடைத்துவிட்டது.

அறப்போர், அதிகாரம் கிடைத்துவிட்ட காரணத்தால், எதையும், எப்படியும் செய்துவிட முடியும் என்ற அரசியல் ஆணவத்தின் மீது அமர்ந்திருக்கும் அரசியலாருடன்.

அறப்போர், தமிழ்மொழியின் தொன்மையையும், தூய்மையையும், தாயகத்தின் தனிப் பண்பையும், துச்சமென்றெண்ணிடும் போக்கினரின் ஆகாவழித் திட்டத்துடன்.

அறப்போர் தொடுக்கும் நாம், ஆட்சிப் பீடத்து அமர்ந்திருப்போருக்கு இன்றுள்ள பலம், பிரசார சாதனம், பண பலம், மேலிடத்து ஆதரவு, எவ்வளவு அதிகம், என்பதை அறிந்து இருக்கிறோம்.

அறப்போர் தொடுக்கும் நாம், அதனால் அரசியல் இலாபம், சில்லறைச் சலுகைகள், வியாபார வசதிகள், பதவித் துண்டுகள் பெறும் எண்ணம் கொண்ட பேதைகள் அல்ல—மூதாதையர் காலமுதல் இருந்துவரும் மொழியையும், அதன் வழி அமைந்திருக்கும் பண்பாட்டையும், காப்பாற்றவே போர்தொடுக்கிறோம்.

அறப்போர், கட்டுப்பாடு, சகிப்புத்தன்மை இவைகளை அடிப்படையாகக்கொண்டதாக இருக்கவேண்டும்.

அறப்போர், ஆட்சியாளர்களிடம் இன்று உள்ள பலவித அடக்குமுறைகளையும், தாங்கிக்கொள்ளும் உள்ள உரம் கொண்டவர்களின், உற்சாகத்தை நம்பியே தொடுக்கப்படுகிறது.

அறப்போர், இழித்தும் பழித்தும் பேசப்படும்—ஏளனம் கண்டனம் ஏராளமாகக் கிளம்பும்—இவைகளைக் கண்டு கலங்காத உள்ளம் வேண்டும்.

அறப்போர் தொடுக்கும் நாம், இன்று அறிந்திருக்கும் அளவு திராவிடப் பண்பினை அறியாதிருக்கும் திராவிடர்கள் பலர், ஆளவந்தார்களின் கட்சியிலே உள்ளனர் என்பதை அறிந்து, அவர்களின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும், ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறுவதற்கான முறையிலே, பணி புரியவேண்டும்.

அறப்போர் தொடுக்கும் நம்மீது ஆட்சியாளர் வீசும் அடக்குமுறை ஆயுதங்களால், நமது உடலிலே ஏற்படும் தழும்பும், ஒழுகும் இரத்தமும், இன்று திராவிடத்தை மறந்து, ஆளவந்தார்களுடன் சேர்ந்துள்ள திராவிடத் தோழர்களை, நமது முகாமுக்குக் கொண்டு வந்து சேர்க்க திராவிடர் கழகம் அனுப்பிவைக்கும் தூதுவர்களாக அமைய வேண்டும்.

அறப்போர் தொடுக்கிறோம்—அன்பழைப்பை ஏற்றுக்கொள்ள ஆயிரமாயிரம் இளைஞர்கள் ஆர்வத்துடன் உள்ளனர் என்ற நம்பிக்கையுடன்.

அறப்போர் துவக்கவும், முதல் படைத்தலைவனாக (சர்வாதிகாரியாக) இருக்கும் சிறப்பிடமும், வாய்ப்பும், எனக்கு அளித்த நமது தலைவர் பெரியாருக்கு என் நன்றி; கமிட்டியாருக்கும் கழகத்தாருக்கும் என்நன்றி.

அறப்போர் நடாத்த, உங்கள் பேராதரவை நம்பி, ஒப்புக்கொண்டுவிட்டேன்—படை வரிசையில் வந்து நில்லுங்கள், என்று உங்களை அழைக்கிறேன்.

அறப்போர், ஆரம்பமாகிறது—வருக! வருக!! வெல்க!!!

இங்ஙனம்,

அண்ணாதுரை,

1-வது சர்வாதிகாரி.

போராட்டத்தில் கலந்து கொள்ள ஆசைப்பட்டு துடிதுடிப்பாய் விளங்கும் தோழர்களுக்கும், தோழியர்களுக்கும் நாம் வற்புறுத்திக் கூறுகிறோம்.

பயஉணர்ச்சியே, பேய் ஆட்சியாகமாறுகிறதென்றால்பதவியைக் காப்பாற்றிக் கொள்ளப் பார்ப்பனருக்குப் பயப்படும் பய உணர்ச்சியே, நம் மந்திரிகளை பேய் ஆட்சி செலுத்தச் செய்யும் என்பதை நாம் விளக்கத் தேவையில்லை. இந்தப் பேய் ஆட்சியைக் கதறக் கதற அடித்துத் துரத்த வேண்டுமானால், எதிர்ப்பில் ஈடுபடும் தொண்டர்கள், ஆட்சியாளர்களுடைய எந்தக் கொடுமைக்கும் கலங்கிவிடாத உள்ள உறுதியும், எத்தகைய அக்கிரமச் செயலையும் தாங்கிக் கொள்ளும் உள்ளப் பொறுமையும், எந்தெந்த நேரத்தில் தனக்கு யார் யார் தலைவர் ஆகிறாரோ அத்தலைவருக்கு கட்டுப்பட்டு அடங்கி நடக்கும் கடமையுணர்வும் நிரம்பப் பெற்றவர்களாக இருக்கவேண்டும். போர் வீரர்களின் ஒழுங்குமுறை பற்றிப் படைத்தலைவர் கூறியிருக்கும் கருத்துக்களை நாம் மற்றொரு பக்கத்தில் தந்திருக்கிறோம். அதைக் கருத்தூன்றிப் படித்து அந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்படும் தொண்டர்கள் மட்டுமே இந்த நடவடிக்கையில் கலந்து கொள்ள வேண்டும் என்பதை மிக மிக வற்புறுத்திக் கூறுகிறோம்.

"இந்த மாதிரியான எதிர்ப்பு நடவடிக்கை, எப்படியோ நடந்தேயாகவேண்டும் என்றுபார்ப்பனியம் ஆசைப்பட்டுவிட்டது! அதன் ஆசைப்படியே நீங்களும் (திராவிடர்களும்) போர்ப்பரணி கொட்டிவிட்டீர்கள்! ஆனால் என்னுடைய தலைமையில், என்னுடைய ஆட்சியில், என் இனத்தவரை நானே அடிக்கச் செய்தேன், சாகச் செய்தேன், சித்திரவதை செய்யுமாறு செய்தேன் என்கிற பெரும்பழி என்மீது ஏற்படாதிருக்க வழியில்லையா? அதாவது இந்த எதிர்ப்பு நடைபெறாதிருக்க ஒரு மார்க்கமில்லையா?" என்று நம்முடைய பிரதமர் ரெட்டியார் அவர்கள் இப்போது எண்ணுவார்களேயானால் நாம் ஆச்சரியப்படமாட்டோம். போர் நடந்துதான் வெற்றிகாண வேண்டுமா? என்பதை முடிவுகட்டும் பொறுப்பு எப்படியும் இப்போது பிரதமர் கைவசத்தில் தான் இருக்கிறது என்பதை நாம் அவருக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறோம்.

இந்த நாட்டுமக்களின் மான உணர்ச்சியையழித்து மிதிப்பதற்காகவே, பார்ப்பனர்கள் சிலர் உசுப்பிவிட்ட பிறகு, கல்விமந்திரியார் அவர்களுடைய மிரட்டலுக்கு அஞ்சி, இந்த இந்தி நுழைப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறார் என்கிற உண்மையைப் பிரதமர் உணர்வாரானால் என்ன செய்யவேண்டும்?

"நான் கல்வி மந்திரியாக ஆவதற்கு இடங்கொடுக்காவிட்டால் கடலில் விழுந்திறப்பேன்" என்று பயமுறுத்தும் தோழர் அவினாசியாரின் பயமுறுத்தலுக்குப் பயப்படுவதை விட்டுவிட வேண்டும். வம்பை விலைக்கு வாங்கும் குறும்புப் போக்கால் விளையும் கேடுகளை நான் அனுமதிக்கமாட்டேன் என்பதை வற்புறுத்தி, முதலில் அவரை கல்வி மந்திரிப்பதவியிலிருந்து இறக்கி விட்டுவிடவேண்டும். அந்த இலாகாவைத்தான் ஏற்றோ, அல்லது பிறரிடம் கொடுத்தோ, உடனே இந்த இந்தி நுழைப்பு உத்திரவை மாற்றிவிட ஏற்பாடு செய்யவேண்டும். இந்த ஒரு முறைதான் எந்த ஜனநாயக ஆட்சியிலும் கையாளப்படுமுறை என்பதையுணர்ந்தால் இதைத் தவிர வேறு என்னவழி என்று கேட்கிறோம்.

"நாளுக்கொரு உத்திரவாகப் போடுவதற்குத்தான் நான் சளைக்கவில்லையே, இந்த உத்திரவை மாற்றவேண்டும் என்றால் நான் அதற்குத் தயார்" என்று கல்வியமைச்சர் காட்டிக் கொள்வாரானால், அதைப் பிரதமரும் விரும்புவாரானால், ஒன்று அப்படியாவது செய்வதைத் தவிர வேறு என்ன வழி? என்று கேட்கிறோம்.

இந்த இரண்டில் ஒருவழியைத் தவிர வேறு எந்த வழியாலும் இந்த எதிர்ப்பு நடவடிக்கை தற்காலிகமாகக் கூட நிறுத்தப்படமாட்டா தென்பதையும், மானமுள்ள ஒரு திராவிடன் நாட்டில் நடமாடும் நிலைமை உள்ளவரையிலும், இவ்வெதிர்ப்பும் நடந்தே தீரும் என்பதையும் நாம் அவருக்குத் தெளிவாக எடுத்துக் கூறுகிறோம்.

தான் பிரதமராயிருந்துகொண்டு இதை நடப்பதற்கு எப்படி அனுமதிப்பது? இந்த உத்திரவைத் தான் எப்படி மாற்றுவது? என்று மயங்குவாரேயானால் உடனே பிரதமர் பொறுப்பை வேறு பார்ப்பனர்களிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறி விடுவதைத் தவிர வேறு வழி என்ன இருக்க முடியும்?

இந்தவழியையும் பிரதமர் மேற்கொள்ளத் தவறுவாரேயானால், அது அவருக்குப் பெரும் பழியாக அதாவது அவர் மறைந்துபோனாலும் அந்தப் பழி என்றைக்குமே மறைக்கப்பட முடியாத அளவுக்குப் பெரும்பழியாக, உலகம் உள்ளவரையும் நிலைத்து நிற்கும் என்பது அவர் அறியாததல்ல. இந்தக் கடைசி நேரத்தில் அவர் எப்படி நடந்துகொள்ளப் போகிறாரோ? அவரைப் பார்ப்பனீயம் எப்படி ஆட்டிவைக்கப் போகிறதோ? யார்கண்டது.?

ஆர்வமும் ஆதரவும் அகமும் புறமும் விளங்க,போரொலிகேட்டு, தொடை தட்டி தோள் உயர்த்தும் தோழர்களே! மறவர்குல மாணிக்கங்களே! தாய் மொழியையழித்துவிட, அதனால் தமிழினத்தை நசுக்கிவிட, செய்யப்படும் சாகஸ வேலைகள் எங்களிடமா பலிக்கும்; வாட்போருக்குப் பின்வாங்காத மறக்குடி மகளிரான நாங்களா இந்த அறப்போருக்குப் பின்வாங்குவோம் என்று முழங்கிய தாய்மார்களே! இதோ சர்வாதிகாரியின் தாக்கீது பிறந்து விட்டது! ஆரம்பமாகி விட்டது அறப்போர்! களம் நோக்கி அடுத்தடுத்து வருக! வருக!! கட்டாயம் நாமே வாகை சூடுவோம்!

இந்தத் தாக்கீது எங்களுக்கில்லையா? எப்போது நாங்கள் புறப்படவேண்டும்? என்கின்றனர் சென்னைக்கு வெளியூர்த் தோழர்கள். பொறுங்கள்! பொறுங்கள்!! படைத் தலைவரின் ஆணைக்கு அடங்கி அழைப்புக்குக் காத்து நில்லுங்கள்! இதோ அழைப்பு எழுதப்படுகிறது! விரைவில் உங்கள் கைக்குக் கிடைக்கும்! புறப்படத் தயார்ப்படுத்துங்கள், புறப்படுங்கள்!

★

ஈரோட்டுக்கு அவினாசிவருகிறார்!

★

ஆகஸ்ட் 14-தேதி இரவு சென்னையைவிட்டு புறப்பட்டு இந்தி மந்திரி அவினாசியார் 15-உ காலையில் ஈரோடு கலைமகள் பள்ளிக்கூடத்தில் ஒரு திறப்பு விழாவுக்காக வரப்போகிறாராம்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

போர் வீரர்களுக்கு !

1. தொண்டர்களுக்குத் தனிப்பட்ட யாரிடமோ அல்லது தனிப்பட்ட எந்த வகுப்பிடமோ சிறிதும் கோபம், வெறுப்பு, துவேஷம் இருக்கக்கூடாது.

2. கடின வார்த்தை, கேவல வார்த்தை, மனவருத்தம் அல்லது ஆத்திரமூட்டும் வார்த்தை கண்டிப்பாய் பிரயோகிக்கக் கூடாது.

3. போலீஸ்காரரிடம் நமக்கு சிறிதும்வெறுப்பு, கோபம், விரோத உணர்ச்சி இருக்கக் கூடாது.

4. போலீஸ்காரர் முன் வந்ததும் அவரைப் பார்த்து புன்சிரிப்பு காட்ட வேண்டும்.

5. கூப்பிட்டால், கைது செய்ததாய்ச் சொன்னால் உடனே கீழ்ப்படிய வேண்டும்.

6. போலீஸ்காரர் அடித்தால் மகிழ்ச்சியோடு, சிரித்த முகத்துடன் அடிவாங்க வேண்டும். நன்றாய் அடிப்பதற்கு வசதி கொடுக்க வேண்டும்.

7. போலீஸ்காரர் பக்கத்தில் வந்தவுடன் நீங்கள் மெய்மறந்து பக்தியில் இருப்பதுபோல், ஒரு மகத்தான காரியத்தை நாம் சாதிப்பதற்காக இந்த அற்ப அதாவது நம் சரீரத்துக்கு மாத்திரம் சிறிது தொந்தரவு, வலிகொடுக்கக் கூடிய காரியத்தை ஏற்கும் வாய்ப்பு (பாக்கியம்) நமக்கு கிடைத்திருக்கிறது என்று வரவேற்கும் தன்மையில் இருக்க வேண்டும்.

8. போலீஸ்காரர் அடிக்கும் போது தடுக்கும் உணர்ச்சியோ, தடியை மறிக்கும் உணர்ச்சியோ கண்டிப்பாக இருக்கக்கூடாது.

9. அப்படிப்பட்ட தொண்டர், சர்வாதிகாரி, யாராகஇருந்தாலும், அவர்கள் அருள்கூர்ந்து கிட்டவே வரக்கூடாது.

10. ஒலி ஒலிப்பதில் அசிங்கமான வார்த்தைகள், தனிப்பட்ட மனிதர்களைக் குறிக்கும் வார்த்தைகள் கண்டிப்பாய் உச்சரிக்கக் கூடாது.

11. எந்தக் காரியத்தின் மூலமும் தொண்டர்கள், நடத்துபவர்கள், தலைவர்கள் பலாத்கார உணர்ச்சி, பலாத்கார பயன் உள்ள எண்ணங்கள், செய்கைகள் கொள்ளக் கூடாது.

12. போலீசார் சுடுவார்களானால் பொதுஜனங்கள் ஓடலாம். ஆனால், தொண்டர்கள் மார்பைக் காட்டியே ஆகவேண்டும்.

13. இந்தி எதிர்ப்பு இயக்கம், காரியாலயம், நிர்வாகம், நிர்வாகஸ்தர்கள் ஆகியவர்களுக்குத் தொண்டர்கள் அடிமைபோல் கட்டுப்பட்டாக வேண்டும்.

14. பெண்கள் இடமும், மற்றும் இயக்கத்தில் உள்ளவர்களிடமும், வெளியில் உள்ளவர்கள் இடமும் அன்பாய், மிக மிக யோக்கியமாய் நடந்து கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட இன்னும் பல காரியங்களில் மிகுதியும் கண்டிப்பாய் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது அவசியமாகும்.

படைத் தலைவர்.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

என்ன? இதற்குப் பெயர் இஷ்ட பாடமா? புதிதாக உருவாக்கப்படும் தமிழ் களஞ்சியத்தில் இதுபோன்று பொருள் கூறப்பட்டிருந்தால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தி அறிவு அரசியல் அலுவலுக்கு ஒரு தகுதியாக வேறு கருதப்படுமாம். இந்தி, இந்துஸ்தானி தேசிய மொழி என்று பண்டிதர் போன்றாரால் கூறப்பட்ட பிறகு எல்லா மாணவர்களும் இந்தியைப் படிப்பார்களா? அல்லது அமைச்சரின் இரண்டாவது மொழிப் பட்டியலிலுள்ள வேறு மொழிகளைப் படிப்பார்களா? படிப்பதற்கு வசதி செய்து தரப்பட்டுள்ள மொழியின்மீது நாட்டம் செல்லுமா? அல்லது சிரமப்பட்டு படிக்க வேண்டியமொழியின்மீதுபற்று உண்டாகுமா? சரஸ்வதி இலாக்காவுக்குச் சம்பந்தப்பட்ட மந்திரி இவற்றைஅறியாதவரா? தெரிந்தும் "இந்தி கட்டாயப் பாடமில்லை" என்றால், ஹோட்டலில் இரு நண்பர்களுக்கும் நடந்த பேச்சுதானே நினைவுக்கு வருகிறது. இப்படிப்பட்ட அமைச்சர்,இன்னும் அமைச்சர் பதவியிலேயே உள்ளாரா என்று வெளிநாட்டொருவன் கேட்டால் வெட்கித் தலை குனிய வேண்டி அல்லவா இருக்கிறது.

"இந்தியை இஷ்டபாடமாகக்கூட ஏற்கமாட்டோம். தமிழில் பண்பட்ட தமிழன் நாக்கு இந்தியை ஏற்கவே ஏற்காது" என்று காங்கரஸ் முகாமிலிருந்து வந்த சிவஞானமே கூறிவிட்டாரே! அவர் மொழி அறிவு இல்லாதவர் என்று அமைச்சர் கூறிவிடமுடியுமா? மனிதனை மந்தியாக்கும் இந்தி மொழி தமிழகத்துக்கு கூடாது என்று தமிழ்த் தென்றல் திரு வி. க. கூறிவிட்டாரே! அவரினும் தமிழை அறிந்தவரா அமைச்சர்? இந்தி மொழியால் தமிழ் மொழி, கலாச்சாரம் முதலியவை பாதிக்கப்படும், நமது தாய் மொழிக்கு வீட்டிலுள்ள செல்வாக்கையும் அழித்து அந்த இடத்தில் இந்தியைக் கொண்டு அமர்த்தத்தான் அவினாசியார் வடநாட்டுக்கு அடிமையாகி சூழ்ச்சி செய்கிறார் என்று கருத வேண்டியிருக்கிறதென்று அன்று எல்லாக் கட்சி தோழர்களும் ஏகமனதாகக் கூறிவிட்டார்களே. இவர்கள் அனைவரும் வகுப்புவாதிகள் என்றால் பின் அமைச்சர் யாரைத்தான் ஆளவந்துள்ளார்—மக்களையா? மாக்களையா? இந்தி கூடவே கூடாது என்று இந்தி எதிர்ப்பாளர் மாநாட்டில் எல்லோரும் விண்ணதிர முழக்கமிட்ட பின்னர் இஷ்ட பாடமாகக்கூட வைப்பானேன்?

வேள்விக்கூட்டத்தாரின் துணைபெற்று வேதரத்தினம் அறிக்கை விட்டது அமைச்சருக்கு ஆறுதல் அளித்திருக்கலாம். அந்த ஆறுதலிலே இந்தி எதிர்ப்பாளர்களையெல்லாம், சு. ம. என்று சொல்லி சுலபத்திலே அடக்கிவிடலாமென்று அமைச்சர் எண்ணிக்கொண்டும் இருக்கலாம். பண்டிதர் வந்தார், பாரதமொழியின் பெருமைபற்றிப்பேசினார், ஆச்சாரியார் வருகிறார், அமைச்சர் செய்த 'புண்ணிய காரியத்துக்கு ஆசி கொடுப்பார்', இவைகளைக் கொண்டு மக்கள் மனம் மாறும், தேசிய மொழிமீது பற்றுபிறக்குமென்றும் நினைத்துக் கொண்டிருக்கலாம். எல்லா இலாகாவிலேயும் ஈடுபடும் பிரதமர், தன் இலாகாவில் ஈடுபடாமலிருப்பதிலிருந்தே தான் செய்தது சரி, பிரதமரின் பூரண ஒத்துழைப்பு இருக்கிறதென்று கவலையற்றும் இருக்கலாம். வருகிற ஆகஸ்டு 15ந்தும்அதற்குத்துணை நிற்குமென்ற சிந்தனையிலீடுபட்டுமிருக்கலாம்.

எப்படியாவது, இந்தியை, ஆரியர் கலாச்சாரத்தை, தமிழகத்தில் நுழைத்து விடுவதுமட்டும் உறுதி என்பது ஆட்சியாளர்கள் நினைப்பு. முதலில் இஷ்டபாடம், பிறகு கட்டாயம்—இதுவும் ஒரு திட்டமாக இருக்கலாம்.

தமிழா, இவைதான் நான் கூறவந்தது. அமைச்சரின் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களையும். அதற்குமேலே காட்டியவிளக்கத்தையும்சிறிது நேரம் சிந்தித்துப்பார். இந்தி எந்த வடிவத்தில் வரினும் அதனை எதிர்த்தே தீருவதென்ற முடிவுக்குத்தானே அமைச்சரின் அறிக்கை, நம்மை வரச் செய்கிறது. தமிழ் நாட்டிலே தமிழ் வளர்ச்சிக்காக, மொழி சம்பந்தமாக, இரண்டாவது முறையாகப் போர்தொடுக்க,அதற்காகப்படை திரட்டஉனக்கு எண்ணம் தோன்றுகிறதல்லவா?

"வந்தவர் வஞ்சகர் தமிழாற்
செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே
பழித்தார்
நம்செயல் ஒழுக்கங்கள் பற்பல
அழித்தார்
நாமுணர்ந்தோம் இந்நாள் அவரஞ்சி
விழித்தார்"

என்ற நிலையிலே உனது போராட்டம் இருக்கவேண்டும்.

பொ. துரைசாமி.

ரோஜா முத்தையா

[5ம்பக்கத் தொடர்ச்சி]

முடிவு. மக்களின் நிலை வரையற்ற அளவு வாழ்வற்றது. நாட்டின் நிலை, செல்வமிருந்தும் சீரழிவு. காரணம் மாற்றானின் சுரண்டல். ஆளவந்தவர்களிடம் அதற்கான திட்டமில்லை; திட்டம் தருவோரை சிறுமதியாளர் எனப் பறைசாற்றுகின்றனர் ஆட்சியாளர். அந்தப்போக்கான ஆட்சியினரின் பக்கம்தான் பிரபல ஏடுகளெல்லாம். உண்மை நிகழ்ச்சிகள் பல் இருட்டடைப்புச் செய்யப்படுகின்றன அந்த ஏடுகளால். சுரண்டலை ஒழிக்காமல், சுய ஆட்சி செய்கிறோம் என்று கூறுகின்றனர். சுரண்டல் ஒழியாத வரையில் சுய ஆட்சி சாத்தியமா? உண்மையா? நாட்டிலே மக்களின் வாழ்க்கை நிலை உயரவேண்டுமானால், சீரழிவு இன்றி சீர்ப்படவேண்டுமானால் சுரண்டலற்ற, சுதந்தர சோஷலீஸ ஆதிபத்திய நாடாக மலரவேண்டும். அது இல்லாத வரை நாட்டின் நிலை, மக்களின் நிலை மாறவே மாறாது. ஆம்! இவைகள் தான் அவன் செய்யத் துடங்கிய பிரச்சாரம்.

மணிமன்னன் வீட்டை விட்டுக் கிளம்பினான். தாய் தடுத்தாள். "அம்மா! உங்களுக்கு விஷயம் புரியாது. நாம் பிறந்து வளர்ந்த நாடு சரிந்து கிடக்கிறது; மக்கள் நாதியற்ற நடைப் பிணமாகத் திரிகின்றனர். கேட்பாரில்லை. சரிந்த நாட்டைச் சரிக்கட்ட உங்கள் போன்ற தாய்மார்கள் என்போன்ற வீர வாலிபர்களைத் தாய்நாட்டின் விடுதலைப் போருக்காக அனுப்பிவைத்து, 'விடுதலை கிடைக்கும் வரை வீடுதிரும்பாதே' என்னறல்லவோ நீங்கள் கூற வேண்டும். அம்மா! தாய் நாட்டிற்குப் பணிபுரியச் செல்லுகிறேன். என்னைத் தடுக்காதே" என்று கூறிவிட்டு விரைந்தான்.

நாட்டிலே ஏறிய மேடைகள் ஆயிரமுண்டு. அவன் வீசிய புரட்சிக் கருத்துக்கள் மக்களின் மனதிலே மாற்றத்தை உண்டுபண்ணியது. மணிமன்னன் சொற்பொழிவு என்றாலே மக்கள் கூடுவார் ஆயிரக்கணக்கில். சில ஆண்டுகளே கடந்தன. ஆதரவு பலப்படுவதை ஆட்சி மன்றத்திலே வீற்றிருப்போர் விட்டுவைக்க விரும்பவில்லை. சிற்சில இடங்களில் ஆட்சியினரின் அடக்கு முறை ஈட்டிகள் அவன் மீது பாய ஆரம்பித்தன. அவன் சொற்பொழிவை வெளியிட்ட பத்திரிகைகளுக்குக் கூட ஆட்சியினர் ஜாமீன் கேட்டனர். தடை உத்தரவுகள் அவன் முன் தவிடுபொடியாயின. தன் ஒரே தாயைக்கூடக் கவனிக்க அவனுக்கு நேரமில்லை. அந்த நேரத்தில் எத்தனையோ மக்களை மனமாறும்படி செய்துவிடலாமே என்று அவன் எண்ணுவான். இதேஎண்ணத்தை எத்தனை நாள் கொண்டிருந்தானோ? தெரியவில்லை. தாய் நோய்வாய்ப்பட்டாள்—உடல் தளர்ந்தது—குற்றுயிரானாள்—உயிர் பிரிந்தது என்ற செய்திகள் தொடர்ந்து வந்தன அவனுக்கு. இருப்பினும் தாய் நாட்டிற்குப் பணிபுரிவதையே பெரியதாகக் கருதிவிட்டான்.

ஆட்சியாளரின் அடக்குமுறை ஈட்டிகள் எழுத்துருவத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் வரை வளர்ந்தது. ஒரு நாள் மணிமன்னன் பேச இருந்த கூட்டத்திற்கு 144. தடையை மீறிப் பேசினான். மக்களும் திரண்டு வந்தனர். போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர், கலைய மறுத்தது கூட்டம். படார்.....படார்...... என்று பல வெடிகள் தொடர்ந்து வெடித்தன. மக்கள் பறந்தனர் பல திக்குகளிலும். ஒரு நிமிஷத்தில் ஒருவருமே அங்கில்லை. ஒரு உருவம் மேடையருகில் பிணமாகிக் கிடந்தது. அது மணிமன்னனது உடல், சுட்டு வீழ்த்தப்பட்டு விட்டான். அவன் உடலை மடியின் மீது போட்டுக் கொண்டு கதறிய ஒரு கட்டழகியைத் தான் போலீஸார் பார்க்க முடிந்தது. அந்தக்கட்டழகி தான் கனிமொழி. மணிமன்னன் தாய்நாட்டிற்குப் பணி புரிந்த நாட்களில் உடனிருந்து பேருதவிகள் செய்து வந்து, அவனது அன்பையும் மதிப்பையும், பெற்றிருந்தவள் கனிமொழி. மணமாகாத மணாளனைக் கட்டியழுது கொண்டிருந்தாள். இச்செய்தி எந்தப் பத்திரிகைகளிலும் வெளிவரவேயில்லை.

தாய் நாட்டுக்காகப் பணிபுரியக் கிளம்பி, தாயைப் பறிகொடுத்து, தன் உயிரையே பறிகொடுத்தான் மணிமன்னன். ஆனால் அவன் யாருக்காக வாழ்ந்தான் என்பதை நாட்டினர் அறிய எத்தனை ஆண்டுகள்—இல்லை எத்தனை நூற்றாண்டுகள் ஆகுமோ?

—()●()—

குட்டியய்யா மறைவு.

●

ஈரோடு ஆக. 4.

2—8—1948 தேதி ஆடிப் பதினெட்டுப்பண்டிகையை முன்னிட்டு இவ்வூரிலிருந்த புரோபேஷன் ஆபீசர் தோழர் கே. குட்டியய்யா (சென்னை ஷெடியூல்டு கழக நிர்வாகஉறுப்பினர் 35 வயது) தனது குடும்பசகிதம் காவேரி ஆற்றுக்குக் குளிக்கச் சென்றார். தனது சகோதரன் மகன் 9 வயது பையன் தண்ணீரில் மூழ்கிவிட இருந்ததைத் தப்புவிக்க முயன்ற தோழர் கே. குட்டியய்யா கால்நழுவி தண்ணீரில் முழுகிவிட்டார். பையன் தப்பித்துக்கொண்டான். ஆனால் அவர் தப்பமுடியவில்லை. 4, 5 மணிநேரம் பரசல் போட்டுத் தேடிக் கடைசியாக மாலை 3 மணிக்கு பிரேதம் கண்டுபிடிக்கப்பட்டு அங்குதானே மறுநாள் அடக்கம் செய்யப்பட்டது.

எழுச்சிக் கதிர்கள்.

-[✱]-

உண்மையிலேயே ஹிந்தி ராமாயணத்தில்தான் அதாவது வடமொழி ராமாயணத்தில்தான் நாம் முதலாவதாக குரங்குகளாக ஆக்கப்பட்டிருக்கிறோம். குரங்குகளாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறோம். அதைப் புகுத்துவதுதான் இந்தியின் தத்துவம்.

பெரியார்.

களையும் வளரட்டும் அதோடு பயிரையும் வளர்ப்போம் என்று கூறுகிறார் அவனாசியார். களை வளர்க்கும் பண்ணையாளனுக்குப் பயிர் வளர்க்கும் பண்பு இருக்கும் என்று நமக்கு நம்பிக்கையில்லை. நம்பிக்கை இருக்கவும் முடியாது.

ம. பொ. சி.

வங்காளத்திலேயோ மராத்தி தேசத்திலேயோ இன்னும் இந்தி கட்டாயமாக்கப்படாத போது இங்கு மட்டும் ஏன் அது கட்டாயமாக்கப்பட வேண்டும்?

திரு. வி. க.

இந்த உரிமைப் போராட்டத்திலே, முதன்மையாகவும், பெரும்பான்மையாகவும் இருக்கும் தமிழர்கள் இந்தக் கலாச்சார சுதந்தரப் போர்த் தாக்குதலிலே தங்களை, முன்னணி வயிரப்படைகளாகக் கருதவேண்டும்.

Dr. கிருட்டினசாமி.

திராவிட நாட்டின் பொது மொழியா ஹிந்தி? அதுவும் ஒரு திராவிடனாகிய நீயா ஹிந்தி இந்நாட்டின் பொது மொழி என்று கூறுவது? திராவிட நாட்டைத் தனி நாடாகப் பிரிக்க முயற்சி நடந்து வருவது உனக்குத் தெரியாதா? அல்லது திராவிட நாட்டுப் பிரிவினைக்குள்ள மக்கள் ஆதரவு உனக்குத் தெரியாதா? கவிஞர்.

பிரிவினைக்கும் போராடலாம். சீக்கிரத்தில் வெற்றியும் பெற்றுவிடலாம். ஆனால் இதிலெல்லாம் செய்ய நமக்குச் சீக்கிரத்தில் மனம் வருவதில்லையே. அது தானே நமக்குள்ள பெரிய குறை.

இராமமிர்தம்.

பெரியார் முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கற்பனை :

★ அக்ரகாரம். ★

★

அக்ரகாரத்தைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஏனய்யா விழிக்கின்றீர், பார்ப்பனச் சேரியை அக்ரகாரம் என்று கூறி விட்டேனென்றா? பரவாயில்லை; மேலே படியுங்கள். நமது அன்றாட ஏழ்மை வாழ்க்கையைப் போல் அங்கு ஒன்றும் இல்லை. "பூர்வ ஜென்ம பாவம்" என்று சொல்கிறார்களே, அந்தத் தத்துவத்தைக் கொண்டு, "நியாயம்" என்று சமாதானப்படவேண்டிய "விதி" தான். ஒரு சில நாடோடி—ஆரியக் கூட்டத்தினரில், மறுமையின் (சொர்க்கத்தின்) நற்பயனை அடைய வழிகாட்டிகளாக—இந்திரலோகத் தரகர்களாக—பிதிர்லோகத் தபால் பெட்டிகளாக—பரலோக 'டெலிவிஷன்'களாக நம் திராவிடப்பெரும் மக்களுக்கு அமைந்து, வசித்து வரும் பூதேவர்களுக்கு உண்மையில் அக்ரகாரம்தான் அது.

அதோ, அப்பெரும்கோவிலைச் சுற்றிலும், "திருக்குளத்தின்" பக்கமாக நேரான ஒரு 'சிமெண்ட் ரஸ்தா' அகலமாகவிருக்கிறதே, அதுதான் "அதலவாய் அக்ரகார" வீதி. அதில் சாதாரணமாக, ஒரே நேரத்தில் இரண்டு மூன்று 'மிலிட்டேரி லாரி'களுக்கு 'சைட்' கொடுக்கலாம்—நாமும் ஓர் 'மோட்டார் பஸ்'ஸில் போனால்கூட. இந்த ரஸ்தாவுக்குக் கிளைகளாக அநேக 'தார்'பாதைகள் இருக்கின்றனவே, அவைகள்தான் அக்ரகாரவாசிகளின் 'மோட்டார் கார்'கள் 'ஷெட்'டிற்குப் போகும் பாதைகள்.

இந்தத் "திவ்விய"ப் பிரதேசத்தைத் தரிசிக்க வேண்டுமானால், மின்சார விளக்குகள் இரவைப் பகலாக்கும் முன்னிரவு வேளையில் சென்றால்தான், கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுக வீட்டு மாடிகளில் சித்திரப் பதுமைகள் என நிற்கும் "அப்ஸரஸ்கள்"—காவிப்புடவையால் முக்காடிட்டுப் 'புனையா ஓவியமா'க நிற்கும் அம்மாமிகள்—அத்தனை பேர்களுடைய 'கண்துடிப்பை'யும், 'தலை மயிர் ஒதுக்கும் திறனை'யும், மோகனப் புன்னகையினையும் கண்டு அனுபவிக்கலாம்.

கீழே வீட்டுத் திண்ணைகளில், இல்லை 'வராந்தாக்'களில் உருண்டு திரண்டு தாளிப்பானைகள் போன்ற வயிற்றை மடியில் சுமந்துகொண்டு, சந்தனம் பூசிய 'பன்ரொட்டி' மார்புடனும் கையில் வண்ண விசிறியுனும் 'ஈஷிச் சேர்'களில் விழுந்து கிடக்கின்றனரே, அவர்களின் "மேனி அழகை" ஒவ்வொரு மக்களும் கண்டு களிக்கவேண்டும். அவர்களைக் கண்டு தரிசித்தாலே போதும்? "கடவுளை"க் கண்ட மாதிரிதான்.

அதோ பால் நிலவாகக்காயும் ஒளிப்பிழம்புகள் தெரிகின்றனவே, அவைகள்தான் 'மெர்குரி லைட்'டுகள். அவைகளின் வெளிச்சத்தில் ஜொலிக்கின்றதே அந்த அறை, அதுதான் "பிராமணோத்தமர்கள்" நடமாடும் கூடம். அங்கிருக்கும் ஒரு "கான சரஸ்வதி"யைப்பாருங்கள்! என்ன அழகாக கந்தர்ப்ப பெட்டியை—மன்னிக்கவும், 'ஹார்மோனியப்' பெட்டியை வாசித்துக்கொண்டு, மயிலினும் இனிய குரலில் பாடுகிறாள்!

அடுத்த அறையைப்பாருங்கள்! ஒரு பேபி என்ன் அழகாக பொய்க் குதிரை ஆடுகிறாள்! புத்தி புத்தி, தெரியாமல் சொல்லிவிட்டேன்-பரதநாட்டியம் ஆடுகிறாள்!

இவைகளெல்லாம் எப்படியோ போகட்டும். நாம் நமது கதையினைச் சொல்வோம்.

அதோ அந்தத் திண்ணையில் ஒருவர் 'அப்பளாக் குடுமி'யுடன், பூணூல் மார்பில் வடக்கயிறுபோல் விளங்க வீற்றிருக்கிறாரே, அவர்தான் தாலுகா ஆபீஸ் குமாஸ்தா சாம்பசிவமய்யர். 'அவர் இவர்' என்று நான் சொல்லுகிறதற்காக என்னிடம் முறைக்காதீர். அவர் என்ன நம்மைப் போன்ற மனிதரான்ன! (இது 'அம்மாமித் தமிழ்' ஸார். வேறுவிதமாக எண்ணிவிடாதீர்கள்!)

அவருக்கு மாதம் 75 ரூபாய். 'கிம்பளத்'தையும் சேர்த்துப்பார்த்தால் எப்படியாவது மாதம் ரூபாய் 100-ஆவது தேறும். அதனைக் கொண்டுதான் அவரும் பி. ஏ. (ஆனர்ஸ்) படித்துவரும் ஆவரது மூத்ததாரத்து, இல்லை இறந்து போன சதஹர்மிணியின் 'புத்ரன்' 'வெங்கு'வும், தற்போது வந்து வாய்த்த இளையாள் (ஆத்துக்காரி, 'ஒய்வ்ப்' எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்களேன்) 'ரதி'யே அழகுப் பிச்சை கேட்கும்படி அழகுள்ள ஸரோஜாவும் 'உண்டுடுத்துப் பணிபூண்டு' வாழ்ந்து வந்தனர். இவ்வளவிற்கும் அவர்களெல்லோரும் 'சொர்க்கத்'தில்போய் வசிக்க விரும்பியதாகவோ, அதற்காக கோவிலில் தவிர பிரயாசைப் பட்டதாகவோ தெரியவில்லை. அவர்கள் வாழ்வே சுகபோக வாழ்வாயிற்றே! பின்னர் எதற்கு அவர்கள் 'சொர்க்கத்தை' நாடப்போகின்றனர்.

அன்றைக்கு சாம்பசிவமய்யர் 'எம்பெருமான் தோடுடைய செவியனு'க்கு என்ன 'அபச்சாரம்' செய்தாரோ தெரியவில்லை. அவரது வேலைக்குச் 'சீட்டுக் கிழித்து' விட்டார் மேலதிகாரி ஒருவர். ஏன் தெரியுமா? அய்யர்வாள் அவர்கள் எடுத்ததற்கெல்லாம் 'கிம்பளம்' வாங்குவது வெகு நாட்களுக்கு முன்பே மேலதிகாரிளுக்குப் புகார்கள் மூலம் தெரிந்தன. அவ்வதிகாரிகள் அனைவரும் 'அந்த இனத்'தைச் சேர்ந்தவர்களாதலால் எப்படியோ தட்டிக் கழித்து' அவாளை—எவாளை-? சாம்பசிவமய்யர்வாளைக் காப்பாற்றி வந்தனர். பலநாள் கள்ளன் ஒருநாள் அகப்படுவானல்லவா? சாம்பசிவமய்யருக்குப் 'போறாத காலம்' போலும்! அவர் வேலை செய்து வரும் தாலுகா ஆபீஸிற்கு 'சூத்திரன்' (திராவிடனான) ஒரு தாசில்தார் வந்து தொலைந்தான். அய்யர்வாளும் ஒருநாள் தமது 'திருக்கைங்கரியத்தை' எப்போதும் போல் செய்து கொண்டிருந்தார். அத்'திருக்கைங்கரியத்'திற்கு அன்பளிப்பை' கொடுத்தவன் எவனோ ஒரு சூனா-மானா போலும்! 'அன்பளிப்பை'யும் கொடுத்து விட்டு அதைத் தாசில்தார் நரசிம்மனாரிடமும் தெரிவித்து விட்டான். "அய்யரு"க்குப் பிடித்தது 'சனி'. வேலை போகப்பார்த்தது. வேலை போய்விட்வில்லை. ஏன் தெரியுமா? அதுதானய்யா சாணக்கிய தந்திரம். அது ஒருவருக்கும் தெரியவே தெரியக் கூடாது. அது 'பெரிய சிதம்பர ரகசியமா'க்கும்.

தாசில்தார் நரசிம்ம 'எஜமான'னிடம் சாம்பசிவம் எவ்வளவோ கெஞ்சினார்; கூத்தாடினார்; காலில் விழாக் குறையாய்ச்

குழைந்தார்; பலிக்கவில்லை அவர் முயற்சி. வீட்டிற்குப் போனார்; தனது துரதிர்ஷ்டத்தை ஸரோஜாவிடம் சொல்லி அழுதார். "சூத்திரப் பயல்களு"க்கு வந்த "பவிசை" ஆண்டவனிடம் (ஆண்டு வருபவனுமல்ல, ஆளப் போகிறவனும் மல்ல) சொல்லி முறையிட்டார். அவர்தான் 'மோனத்திற்கு' கல்லாயிற்றே! எங்ஙனம் கேட்பார்? கடைசியில் ஒருவாறு மனந்தேறி ஒரு முடிவுக்கு வந்தார். என்ன முடிவு? அதுதான் தெரிந்ததாயிற்றே, சார்! தன் கிளியன்ன மனைவி ஸரோஜாவுடன் தாசில்தார் எசமான் நரசிம்மனாரைப் பேட்டி கண்டு தம் குறைகளை மன்னித்து ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொண்டார். ஸரோஜாவின் அழகு நரசிம்மனாரின் "கல் நெஞ்சை"யும் பாகுபோல் உருக்கி விட்டது. தாசில்தாரின் மனம் பேதலித்தது, ஸரோஜாவின் உடற் குழைவுகளைக் கண்டு. சற்று நேரம் சிந்தித்தார். சாம்பசிவமய்யரின் மனங்குளிர்ந்தது. தாசில் தாரை அன்றிரவு 10-மணி சுமாருக்கு விருந்துண்ண வரும்படி அழைத்தார். தாசில்தார் தலையசைத்தார்; சாம்பசிவமய்யருக்கும் வயிறு ஊறியது. அன்று இரவு 10-மணிக்கு மேல் நல்சுவை விருந்து முடிந்தது. ஸரோஜாவின் 'இசைவிருந்து' ஆரம்பமாயிற்று. பின்னர் 'ஆடல் விருந்து', 'உடல் விருந்து'—இன்னும் பலப்பல. தாசில்தார் சாம்பசிவமய்யருக்கு அபயமளித்தார். ஆம், சாம்பசிவமய்யரின் வேலை அவருக்கே விசேஷித்த சில சலுகைகளுடன் திருப்பித் தரப்பட்டது. என்னமோ தகுதி, திறமை என்று கதைக்கிறீர்களே? இதுதான் அய்யா ஆக்ரகாரம்!

(இக்கதை "புதுமைப் பித்தனி"ன் 'பொன்னகரம்' என்ற கதையின் தழுவல்)

சீலன்.

இந்தியாவில் வழங்கி வரும் பல மொழிகளில் இந்தி ஒன்றுதானா தேசியமொழியாக ஆக்கப்படக் கூடிய யோக்கியதை பெற்றிருக்கிறது?

திரு. வி. க.

புதிய பதிப்பு

விற்பனைக்குத் தயார்!

★

1. பணம் பிடுங்கிப் பார்ப்பனர் ரூ. 0—14—0
2. பெண் ஏன் அடிமையானாள் 0—8—0
3. இயற்கை வழி ஆத்மீகவழி 0—4—0
4. அகத்தியர் ஆராய்ச்சி 0—3—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்கும் இடம்
நாதன் கம்பெனி லிமிடெட்
கச்சேரி வீதி, ஈரோடு.

[3ம் பக்கத் தொடர்ச்சி]

ஹாயி மொழிபேசுவதிலிருந்தும் திராவிடர்களுடைய ஆட்சியும், திராவிடர்களும் இந்திய உபகண்டம் பூராவிலும் பரவியிருந்தனர் என்பது தெரிகிறது. இதிலிருந்து திராவிடர்கள் ஒரு வகுப்பையோ அல்லது ஜாதியையோ சேர்ந்தவர்களல்ல ஒரு மாபெரும் இனம் என்பதும், திராவிடநாடு கேட்பது வகுப்புத்துவேஷமல்ல முற்றிலும் நியாயம் தான் என்பதும் உண்மையறியும் நோக்கம் கொண்ட எவருக்கும் புரிந்துவிடும்.

திராவிடர்கள் இந்தியாவிலேயே பிறந்து ஆண்டு வந்த ஒரு இனத்தவர்கள். ஆனால் ஆரியர்கள் இந்தியாவிற்குப் பிழைப்பின் காரணமாகக் குடிபுகுந்து பலநூறு ஆண்டுகளாக இங்கேயே தங்கி விட்டபடியால், இந்தியாவிலுள்ள இனங்களில் ஒன்று என்றுமட்டும் கூறுவதற்கு யோக்கியதை பெற்றவர்களே. தவிர இந்தியாவைச் சொந்த

குரு தைலம்

மிகச் சிறந்தது

தலைவலி ஜூரம் ஜன்னி முதலிய சகலவித வாய்வு வலிகளுக்கும் நிகரற்றது
210-வியாதிகளுக்கு அரசன்

டாக்டர் ஏ. மதுரம் சன்ஸ்
குரு மருந்து சாலை............திருச்சிராப்பள்ளி

நாடாகப் பெற்றவர்களுமல்ல. ஆகவே இந்த இரண்டு இனத்தவரையும் இந்தியர்கள் என்றும்—பாரதத்தாயின் புதல்வர்கள் என்றும்-ஒரு நாட்டின் மக்கள் என்றும் கூறுவது சூழ்ச்சிக்காரர்களின் பித்தலாட்ட வேலைகளேதவிர உண்மை அல்ல. இந்தியாவென்பது ஒரு நாடல்ல ஒரு பெரிய உபகண்டம். அதாவது பல சிறிய நாடுகளைக் கொண்ட ஒரு நிலப்பரப்பு.

சிலர் ஆரியர்கள் என்றும் திராவிடர்கள் என்றும் பிரித்துக்கூற முடியாதபடி இரண்டு இனங்களும் ஒன்று சேர்ந்துவிட்டதென்றும் வாதிக்கின்றனர். இது வடநாட்டைப் பொருத்த மட்டில் உண்மைதான். ஏனெனில் அங்கு அடிக்கடி வெள்ளையர், முஸ்லீம்கள் போன்ற வேற்றுநாட்டவர்கள் படையெடுப்புகளும், பெரிய பெரிய கலகங்களும், அரசுகள் அடிக்கடி மாறியமைவது போன்ற பரபரப்பான நிலைமைகளும் ஏற்பட்டிருக்கின்றன. மக்களும் திடீர் திடீரென்று எதிர்பாராத வகையில் இடம் விட்டு இடம் மாறவேண்டிய சூழ் நிலையில் இருந்தபடியால் அங்கு பல இனங்கள் ஒன்று சேர்ந்திருக்கலாம். அது மட்டுமல்ல, இம்மாதிரி பல இனங்களின் கூட்டுறவுகளினால் சில புதிய இனங்களும் தோன்றியிருக்கலாம்.

திராவிடநாடு என்று நாம் குறிப்பிடும் பகுதி திராவிடர்களின் முக்கிய மொழிகளாகிய தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கையும் தாய்மொழியாகக் கொண்டு வாழ்கின்ற மக்களைக் கொண்ட சென்னை மாகாணத்தைத்தான். இந்தப் பகுதி வடநாடுபோல் அல்லாமல் எப்பொழுதும் அமைதியாக இருந்து வந்திருக்கிறது. இங்கு வாழ்கின்ற திராவிட மக்கள் வடநாட்டில் இருப்பது போல் மற்ற இனங்களுடன் கலந்து பிரிக்க முடியாதபடி மாறிவிடவுமில்லை. இந்த இரண்டு இனங்களும், ஒன்று சேர்க்கவும்—சேரவும் முடியாத முரண்பட்ட கலாச்சாரங்களுடன் தான் இன்னமும் இங்கு இருந்து வருகிறது. சாதாரணமாகவே,பார்த்தால்கூட புரிந்துவிடும் இங்குள்ளவர்களை ஆரியரா, திராவிடராவென்று.

திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையை மறுக்கவேண்டும் என்பதற்காக இன்னும் சிலர் "இரண்டு இனமும் பிரிக்க முடியாதபடி இரத்தக்கலப்பு ஏற்பட்டு விட்டது" என்று சொல்கிறார்கள். இது சுத்த அபத்தமான பேச்சு. எங்கோ சில ஆரியப் பெண்கள் சந்துபொந்துகளில், இருட்டு நேரத்தில், ஏதாவது சில காரணங்களைக் கொண்டும், அல்லது தன் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளவும், எப்பொழுதாவது இரண்டொரு இரவுகள் கூடுவதையும், டாக்டர் சுப்பராயன் போன்ற சிலர் ஆரியப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டிருப்பதையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு, இருபெரும் இனங்களிடையே இரத்தக் கலப்பு ஏற்பட்டுவிட்டது என்பது மிகவும் தவறு. ருக்மணியை அருண்டேல் மணந்து கொண்டதைப்போல இந்நாட்டுப் பெண்கள் பலரை வெள்ளையர் கூடியிருக்கின்றனர். அதனால் இந்தியரும் வெள்ளையரும் இரண்டறக் கலந்துவிட்டனர் என்பதா? நானும் பார்த்திருக்கிறேன், சில ஆரியப் பெண்கள் திராவிடர்களுடன்கூடி தனித்து வாழ்வதை. ஆனாலும் அவர்கள் ஆரியர்களுடைய நடையுடை பாவனைகளையும்—பழக்க வழக்கங்களையும்—பேச்சு வார்த்தைகளையும் மாற்றிக்கொள்ளாமல்தான் இருக்கின்றனர். இப்படியிருக்கையில் ஆரிய நாகரீகம் வேறு திராவிட நாகரீகம் வேறு என்று பிரித்துக்கூற முடியாதபடி ஒன்றாகக் கலந்துவிட்டது என்றுகூறுவதுமுட்டாள்தனமல்லவா? பிரித்துக் கூறமுடியாத நிலை என்றால் இரு இனத்தின் பண்பாடுகள்—நாகரீகங்கள்—பழக்க வழக்கங்கள் ஆகியவைகள் மறைந்து புதியதொரு பண்பாடு தோன்றியிருக்கவல்லவா வேண்டும்? அப்படியில்லாமல் ஒன்று அழிந்து மற்றொன்று நிலைத்திருக்குமாயின் ஒன்றை மற்றொன்று அழித்துவிட்டது என்றுதானே பொருள் கொள்ளமுடியும்? அப்படி மாற்றம் எதுவுமே இங்கு நிகழவில்லை.

திராவிட நாகரீகத்தை அழித்து ஒழித்துவிட ஆரியம் அன்றுதொட்டு நாளதுவரைமுயற்சித்துக் கொண்டுவருகிறது! அதனால் முடியவில்லை—முடியவும் முடியாது! உலகம் உள்ள வரைக்கும் திராவிட நாகரீகம் இருந்தேதான் தீரும்! இந்த உண்மையை உணர்ந்து தங்களுடைய போக்கை மாற்றிக் கொண்டு திராவிடர்களுடன் ஒத்துவாழ ஆரியர்களும் முயற்சிக்கவில்லை. தங்களுடைய பழக்க வழக்கங்கள் தான் உயர்ந்ததென்று கூறிக்கொண்டு விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். நிலைமை இப்படியிருக்கையில் இரத்தக் கலப்பு ஏற்பட்டு விட்டது, இனிப்பிரிக்க முடியாது என்று கூறுவது மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சிதானே.

திராவிடர் ஆரியர் என்று பிரித்துக் கூற முடியாது என்று கூறும் திராவிடன், தன்னைத் தானே ஒரு "இப்பந்தி" இனம் என்று ஒப்புக்கொள்கிறவனாக இருப்பான். இதுபோல் ஒப்புக்கொள்ளும் சில சோற்றுப் பிண்டங்களும் திராவிடத்தில் இருக்கின்றன. இதுகளுடைய நரம்புக் குழாய்களில் ஓடுவது இரத்தம்தானா அல்லது வேறு ஏதாவதாக இருக்குமோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுவதுண்டு. உண்மையிலேயே இதுபோன்ற ஒரு மோசமான நிலைமை ஏற்படுமாயின் குமரிக்குத் தெற்கிலிருந்த லெமூரியாக் கண்டத்தைக் கடல் விழுங்கியதைப்போல் எஞ்சியுள்ள திராவிடத்தையும் கடற்கோள்வந்து அழித்து விடுவதே மேல் என்றுதான் சொல்வேன்.

திராவிடர்கள் இந்திய உபகண்டம் பூராவிலும் பரவியிருந்ததுடன் ஆட்சி நடத்தியுமிருக்கின்றனர். ஆயினும், சரித்திர ஆசிரியர்களும், நிலநூல்படம் வரைவோர்களும் தென்னாட்டைத்தான் திராவிடம் என்றும் இங்கு உள்ள ஆந்திரம், கன்னடம், மலையாளம், தமிழ்ஆகியமொழிகள் பேசுவோர்களைத்தான்திராவிடர்கள் என்றும் எழுதி வருகின்றனர். காரணம் இங்குள்ளவர்கள்தான் கலப்பற்றுத் தனித்து வாழ்கின்றனர். அது மட்டுமல்ல தென்னாட்டில்தான் திராவிட சமுதாயம், என்(?) மனித சமுதாயமே தோன்றியதும்கூட. இதுபோன்று பலவேறு சிறப்புவாய்ந்த ஒரு இனம் வேற்றுநாட்டவரின் ஆட்சியின் கீழ் அடிமையாக வாழவிரும்பாமல் தனி சுதந்தர நாடாக வாழ விரும்புகிறது. இந்த ஆசையின் எதிரொலிதான் "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற முழக்கம்.

திராவிடநாடு தனிசுதந்தரக் குடியரசாக அமைந்து விட்டால், உழைக்காது ஊரை எய்த்து உல்லாச வாழ்வு வாழும் ஆரியர்களின் சுரண்டல் திட்டத்திற்குச் சாவுமணி அடிக்கப்பட்டு விடும் என்பது உண்மை. இதை உணர்ந்த ஆரியர் திராவிட நாட்டுப்பிரிவினைக் கோரிக்கையை வகுப்புவாதம் என்ற திரையிட்டு மறைத்துவிடப் பார்க்கின்றனர். இதுமட்டுமல்ல இந்திய உபகண்டத்தில் ஆரிய சாம்ராஜ்யத்தை அமைத்துவிட முயற்சிக்கின்றனர். அவர்கள் முயற்சி வெற்றியளித்துவிடும் போலவே இருக்கிறது, இந்தியக் கவர்னர் ஜெனரலும்பிரதமர் போன்றவர்களும் ஆரியர்களாகவே இருப்பதைப் பார்ப்பின். இந்தியப் பிரதம

புதிய வெளியீடுகள்.

★

1. தீண்டாமை ரூ. 1—8—0
2. இதோ! பெரியாரில் பெரியார் 0—6—0
3. திராவிடக் கழக லட்சியம் 0—4—0
4. மொழி—எழுத்து 0—4—0
5. வாழ்விலோர் திருநாள் 0—4—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

விற்பனை உரிமையாளர்

நாதன் கம்பெனி லிமிடெட்

கச்சேரி வீதி, ஈரோடு.

ரோஜா முத்தையா

ரும் சமீபத்தில் திராவிடத்தின் தலை நகரான சென்னையில் வகுப்புவாதத்தை அதாவது இனப்போராட்டத்தை ஒழித்துவிடுவோம் என்று கூறியிருக்கிறார். இதன் பொருள் இந்திய உபகண்டத்தில் ஆரிய ஆட்சியை அமைத்துவிட்டோம், அதைப் பாதுகாத்தே தீருவோம் என்பதுதானே? இந்த உண்மையை உணராத சிலரும், தெரிந்திருந்தும் சுயநலத்தை முன்னிட்டு சிலரும், திராவிட மக்களின் பிறப்புரிமையாகிய திராவிடநாடு கோரிக்கையை வகுப்புவாதம் என்று கூறி அழித்துவிட முயற்சிக்கின்றனர். எவர் எக்காரணத்தைக் காட்டினாலும் சரி, திராவிடர்களின் பிறப்புரிமையை மறுப்பவர்களும், நசுக்கிவிட முயற்சிப்பவர்களும் திராவிட நாட்டுக்கும்—மக்களுக்கும் துரோகிகள்தான். வருங்கால திராவிடத்தில் அவர்களுக்கு வாழ இடமில்லை என்பது உறுதி.

உரிமை உணர்ச்சி கொண்ட ஒரு இனத்தின் கோரிக்கையைச் சட்டத்தையும், துப்பாக்கியையும் துணையாகக்கொண்டு அடக்கிவிடமுடியுமென்று கருதி அதிகார போதையில் மூழ்கிக் கிடந்த அரசுகள் பல பல உண்டு. ஆனால் அவைகள் முடிவில் கண்டது வெற்றியல்ல தோல்விதான்! உலக வரலாறு படித்திருக்கும் பண்டிதருக்கு சரித்திரம் கற்பிக்கும் இந்த உண்மை புரியாதிருக்கக் காரணமில்லை. இந்திய உபகண்டத்தில் ஆரிய சாம்ராஜ்யத்தை அமைக்க வேண்டுமென்று கருத்துக்கொண்டிருக்கும் பண்டிதரின் பரந்த மனோபாவம் கொண்ட உள்ளத்தை, சரித்திரம் கற்பிக்கும் உண்மை, தொட முடியவில்லை. காரணம் இனப்பற்றுதான். உள்ளபடியே ஆட்சி பீடத்தைச் கைப்பற்றி அமைச்சர் பதவியைப் பெறுமுன் பண்டிதர் பரந்த நோக்கமுடையவராகவும், தீவிரப் பொதுவுடைமை வாதியாகவும், ஜனநாயகப் போக்கையே விரும்புவராகவும் காட்டியிருக்கலாம். ஆனால் இன்று அந்த நிலை மாறி விட்டது.

ஜெர்மன் மக்களின் தேசிய உணர்ச்சியை, தன் சகாக்களின் ஆதிக்க ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ளவும், தான் சர்வாதிகாரியாக வரவும் பயன்படுத்திக்கொண்டான் அந்நாட்டு ஆரியரான ஹிட்லர். அதுமட்டுமல்ல உலகநாடுகள் அனைத்தையும் ஆரியத்தின் தலைநகரான பெர்லினுக்கு தலைவணங்கும்படி செய்ய முயற்சித்தான். முடிவு என்ன என்பதுதான் தெரியுமே? அதுபோலவே இந்திய மக்களின் தேசிய உணர்ச்சியை எழுப்பிவிட்டு அதைப் பயன்படுத்திக் கொண்டு, டெல்லியைத் தலை நகராகக் கொண்ட ஆரிய சாம் ராஜ்யத்தை இந்திய உபகண்டத்தில் அமைத்து, இந்தியாவின் மற்ற பகுதிகளை எடுத்ததற்கெல்லாம் டெல்லிக்கு காவடி தூக்கும்படி செய்துவிட முயற்சித்தனர் இந்திய தேசியவாதிகள் என்று கூறிக்கொண்டிருக்கும் இந்நாட்டு ஆரியர்கள். ஆனால் முதல் படியிலேயே அவர்களுக்குக் கிடைத்த தோல்வி, முஸ்லிம்களின் இன அரசான பாகிஸ்தான் அமைந்தது. அடுத்த தோல்வி, நாளை அமையப்போகும் திராவிடஸ்தான்.

ஆரிய அரசை அமைத்துவிட்டோமெனறோ அல்லது வருங்காலத்தில் அமைத்துவிட முடியுமென்ற நம்பிக்கையுடனேயோ இருக்கின்றனர் ஆட்சி பீடத்தில் இடம்பெற்றிருப்பவர்கள். இந்த நிலைசரிந்து விழும் காட்சியை நாம் காணத்தான் போகிறோம். சரித்திரமும் அதைத்தான் கற்பிக்கும்.

திராவிட நாட்டு மக்களிடையே இதுவரை கண்டிருக்க முடியாத ஒரு விழிப்புணர்ச்சியும், விடுதலை வேட்கையும் தோன்றியுள்ளது. எழுச்சியுற்ற சமுதாயத்தில் புரட்சிக் கீதம். "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற முழக்கம். இதை அடக்கி ஒடுக்கி விடலாம் எனறு கருதாதீர்கள்! ஒரு வேளை துரதிர்ஷ்ட வசமாக இந்த கிளர்ச்சி அடக்கப்பட்டு விடுகிறது என்று வைத்துக்கொண்டாலும், அது வருங்காலத்தில் வெற்றி பெற்றே தீரும். இன்றல்ல, நாளை, என்றாவதொரு நாள் சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கும்பொழுது திராவிடன் ஆண்ட வரலாறும், பண்டைய சிறப்புகளும் அதில் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். இந்தச்சிறப்பிற்குரிய நிலையைக் காணும் வருங்காலத் திராவிடர்களின் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து ஆக்கம் கலந்த பெருமூச்சு வெளிவரும். அதில் "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற ஒலி கிளம்பித்தான் தீரும். ஏக்கத்தின் எதிரொலி புரட்சியாக மாறி திராவிட தனியரசு அமைந்தேதான் தீரும். அவ்வளவு என் போகவேண்டும்; நம்முடைய பரம்பரையிலேயே—வாழ்நாள் முடிவதற்குள்ளாகவே திராவிடக் குடியரசை அமைத்து விடுவோம். இதுதான் நாம் வருங்காலச் சந்ததியார்களுக்கு வைத்துவிட்டுப் போகும் பரிசு.

"புத்ததாசன்"

வட நாட்டினர் ஏறக்குறைய ஒரேமொழி பேசுகின்றனர் என்று கூறப்படுகிறது. அப்படியானால் ஏன் அங்கு வகுப்புக் கலவரம் தாண்டவ மாடுகிறது. மொழியொன்றே மக்களைப் பிணைத்து விடும் என்றால் இந்நாட்டில் பல நூற்றாண்டுகளாக தமிழ் பேசி வாழும் பார்ப்பனர்கள், என்றோ, தாங்கள் மேல் ஜாதி என்ற அகம் பாவத்தை விட்டு மற்ற தமிழர்களோடு ஒன்று சேர்ந்திருக்க வேண்டுமே? அருள் தங்கையா.

குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

★

	Rs.	As.	Ps.
தத்துவவிளக்கம்	0	12	0
புது ரஷ்யா	0	8	0
இந்தியாவின் குறைபாடுகள்	0	8	0
பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்)	0	8	0
நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா?	0	6	0
கர்ப்ப ஆட்சி	0	6	0
பெரியார்பெருந்தொண்டு	0	6	0
வெளியேறு	0	6	0
பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம்	0	4	0
பொதுவுடைமைத் தத்துவங்கள்	0	4	0
புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை)	0	4	0
மதப்புரட்சி	0	4	0
வால்டையரின் வாழ்க்கைச் சரிதை	0	4	0
கார்ல் மார்க்ஸ்	0	4	0
சமதர்ம உபன்யாசம்	0	4	0
அப்பரும் திருஞான சம்பந்தரும்	0	3	0
சோஷியலிசம்	0	3	0
இலங்கை உபன்யாசம்	0	3	0
இராமாயணப் பாத்திரங்கள்	0	3	0
மேல்நாடும், கீழ்நாடும்	0	3	0
உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை?	0	3	0
இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து!	0	2	0
இதிகாசங்கள் புகட்டும் நீதி	0	2	0
உண்மைத் தொழிலாளி யார்?	0	2	0
திருச்சிப் பிரசங்கம்	0	2	0
ராமலிங்க சுவாமி பாடல்	0	2	0
தமிழ் இசை-நடிப்புக் கலைகள்	0	1	0

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,

கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutcherystreet, ERODE